بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 48

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 - 15 ஜமாதில் அவ்வல் ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - நுபுவ்வத் 30 ★ 30 நவம்பர் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

قَالَ هٰذَا رَحۡمَةٌ مِّنۡ رَّبِّىۡ ۚ فَاِذَا جَآءَ وَعۡدُ رَبِّىۡ جَعَلَهٗ دَكَّآءَ ۚ وَكَانَ وَعۡدُ رَبِّىۡ حَقًّا ۟

இது என் இறைவனின் அருளேயாகும். ஆனால், (உலக அழிவு பற்றிய) என் இறைவனின் வாக்குறுதி நிறைவேறும்போது அவன் அ(ந்)தத் தடையி)னைத்(தகர்த்து) தூள் தூளாக்கி விட்டான். என் இறைவனின் வாக்குறுதி நிச்சயமாக உண்மையாகும் (அல் கஹ்ஃப்: 99)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## அல்லாஹ்விற்காக அர்ப்பணிக்கின்ற செயல் முன்மாதிரிகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காகவும் அபூபக்ர் (ரலி) அவர்களின் அர்ப்பணிப்பு நிரூபணம் ஆகுவதற்காகவும் உலகில் வல்லமையுள்ள இருப்பின் மீதான நம்பிக்கை உருவாகுவதற்காகவும் நபிமார்களுக்கு (உலகத்) தேவைகள் ஏற்படுகின்றன

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

**நபிமார்களுக்கு தேவைகள் ஏன் ஏற்படுகின்றன?**

நபிமார்களுக்கு தேவைகள் ஏன் ஏற்படுகின்றன? என்ற ஒரு முக்கியமான விஷயத்தை நான் இங்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன். நபிமார்களுக்கு எந்த தேவையும் ஏற்படாமல் இருக்கச் செய்வதற்கு அல்லாஹ் வல்லமை படைத்தவன் ஆவான். ஆனால், அல்லாஹ்விற்காக அர்ப்பணிக்கின்ற முன்மாதிரிகளுக்கான உதாரணம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காகவும், அபூபக்ர் (ரலி) அவர்களின் அர்ப்பணிப்பு நிரூபணம் ஆகுவதற்காகவும் உலகில் வல்லமை மிக்க இருப்பின் மீதான நம்பிக்கை உருவாகுவதற்காகவும், மேலும் அல்லாஹ்விற்காக அர்ப்பணிப்பு செய்யக் கூடியவர்கள் உலகிற்கு அல்லாஹ்வின் அடையாளங்களாக திகழ்வதற்காகவும் நபிமார்களுக்கு (உலகத்) தேவைகள் ஏற்படுகின்றன. மேலும், அந்த மறைமுகமான நேசம் மற்றும் இன்பத்தை பற்றி உலகிற்கு தகவல் கிடைப்பதற்காகவும் நபிமார்களுக்கு தேவைகள் ஏற்படுகின்றன. அந்த நேசத்திற்கெதிரில் பொருள், செல்வம் போன்ற அன்பிற்குரிய மற்றும் உள்ளத்தை கவரக் கூடிய விஷயங்களை எளிதாகவும், மகிழ்ச்சியுடனும் தியாகம் செய்ய முடியும். பின்னர், செல்வத்தை செலவிட்ட பிறகு அல்லாஹ்விற்கான அர்ப்பணிப்பை முழுமை செய்வதற்காக உயிரைப் போன்ற விஷயத்தை கூட இறைவனின் வழியில் கொடுப்பதற்கு மனிதன் தயங்கக் கூடாது.

சுருக்கமாக, நபிமார்களுக்கு (உலகத்) தேவைகள் ஏற்படுவதற்கான அசல் நோக்கம் உலகின் பொய்யான நேசத்திலிருந்தும், அழியக் கூடிய பொருட்களிலிருந்தும் கவனத்தை திருப்புவதற்கான போதனை வழங்குவதும், அல்லாஹ்வின் இருப்பின் மீது புதுமையான ஈமானை உருவாக்குவதும், மனித குலத்தின் வளர்ச்சிக்காகவும், நன்மைக்காகவும் தியாகம் செய்வதற்கான ஆற்றலை உருவாக்குவதும் ஆகும். அவ்வாறில்லையென்றால்,

خَزَآئِنُ السَّمٰوٰتِ وَ الۡاَرۡضِ

(வானம் மற்றும் பூமியின் கருவூலங்களின்) அதிபதியின் பார்வையின் கீழ் நடக்கும் அந்த தூய

இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்...

## தன்னைத் தானே ஆலிம் என்று கருதிக் கொள்ளக் கூடிய நபருக்கு புதிய விஷயத்தை ஏற்பது கடினம் ஆகும். நிராகரிப்பாளர்களாகிய அவர்களுடைய உள்ளம் சுத்தமான எழுத்துப் பலகையாக இருந்தது. எனவே அவர்கள் மிக விரைவாக அன்னார் (ஸல்) மீது ஈமான் கொண்டு விட்டார்கள். ஆனால் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களாகிய எவர்களிடம் இறைவனின் வேதம் இருந்ததோ அவர்கள் இழப்பிற்குரியவர்களாக இருந்தனர்

وَكَيۡفَ تَصۡبِرُ عَلٰى مَا لَمۡ تُحِطۡ بِهٖ خُبۡرًا ۟ قَالَ سَتَجِدُنِىۡۤ اِنۡ شَآءَ اللّٰهُ صَابِرًا وَّلَاۤ اَعۡصِىۡ لَكَ اَمۡرًا ۟

(18:69,70)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

மூஸவிய்ய தொடரைச் சேர்ந்த மக்களுக்கு முஹம்மதிய்ய ஞானங்களை புரிவது உண்மையில் கடினமாக இருக்கும். ஏனெனில், இந்த மார்க்கத்தில் ஏராளமான புதுமையான விஷயங்கள் கூறப்படும். மேலும், தன்னைத் தானே ஆலிம் என்று கருதிக் கொள்ளக் கூடிய அந்த நபருக்கு புதிய விஷயத்தை ஏற்பது கடினம் ஆகும். நிராகரிப்பாளர்களாகிய அவர்களுடைய உள்ளம் சுத்தமான எழுத்துப் பலகையாக இருந்தது. எனவே அவர்கள் மிக விரைவாக அன்னார் (ஸல்) மீது ஈமான் கொண்டு விட்டார்கள். ஆனால், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களாகிய எவர்களிடம் இறைவனின் வேதம் இருந்ததோ அவர்கள் இழப்பிற்குரியவர்களாக இருந்தனர். ஏனெனில், இஸ்லாத்தின் ஒவ்வொரு விஷயமும் அவர்களின் வேதங்களுக்கு எதிராக இருந்தது. அவர்களின் பொறுமையின் தரத்தை பகிரங்கப்படுத்தியிருந்தது. மேலும், அவர்கள் சோதனையில் வீழ்ந்து

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்...

## நபிமொழி

**வழிப்பாதையில் இருந்து வேதனையளிக்கும் பொருட்களை அகற்றுதல்**

(2472) ஹஸ்ரத் அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒருமுறை ஒரு நபர் சாலையில் சென்று கொண்டிருந்தார். அவர் சாலையில் முட்களை கொண்ட மரக் கிளை கிடப்பதைக் கண்டு அதை எடுத்து தொலைவில் வீசி விட்டார். அல்லாஹ் அவருடைய செயலை கண்ணியமுடன் பார்த்தான். மேலும், அவரது (குறைகள் மீது) திரையிட்டவாறு அவரது பாவங்களை மன்னித்து விட்டான்.

**நம்பிக்கையாளர் எப்போது நம்பிக்கையாளராக இருக்கின்றார்?**

(2475) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: விபச்சாரன் விபச்சாரம் செய்கின்றபோது அவன் நம்பிக்கையாளனாக இருப்பதில்லை. மேலும் ஒருவர் மது அருந்தும்போது நம்பிக்கையாளராக இருக்கின்ற நிலையில் அவர் மது அருந்துவதில்லை. மேலும், ஒருவர் திருடுகின்றபோது அவர் நம்பிக்கையாளராக இருக்கின்ற நிலையில் திருடுவதில்லை. ஒருவர் கொள்ளையடிக்கின்றபோது நம்பிக்கையாளராக இருக்கின்ற நிலையில் (கொள்ளையடிப்பதில்லை),எதன் பக்கம் மக்களின் பார்வை செல்கின்றதோ அதனை கூட அவர் கொள்ளையடிப்பதில்லை.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் மழாழிம், 2008-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை வரலாற்றின் சில அம்சங்கள் &**
**பனூ கைனுகாவுடனான போரின் முழு விவரங்கள் & இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போரைக் கருத்தில் கொண்டு**
**துஆவிற்கான தொடர் அறிவுரை**

அன்னார் (ஸல்) அங்கு செல்வதும், நீங்கள் தஹஜ்ஜுத் தொழுகையையும் நிறைவேற்றுங்கள் என்று தமது மகள் மற்றும் மருமகனுக்கு அறிவுரை வழங்குவதும் அன்னாருடைய இந்த முழுமையான உறுதியை சுட்டிக் காட்டுகின்றது.அதாவது எந்த போதனையின் கீழ் அன்னார் (ஸல்) மக்களை வழிநடத்த விரும்பியிருந்தார்களோ அந்த போதனையின் மீது அன்னாருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது என்பதை சுட்டிக் காட்டுகின்றது

இரவு நேரத் துஆக்கள் தான் அல்லாஹ்வின் அருட்களை அதிகமாக ஈர்க்கின்றன. மேலும், இன்றைய நாட்களிலோ உலகை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு குறிப்பாக இதற்கான தேவை இருக்கின்றது

---

**அஹ்மதிகள் துஆக்களின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். relax- ஆகிவிடக் கூடாது**
**குறைந்தபட்சம் ஒவ்வொரு தொழுகையிலும் ஒரு ஸஜ்தா அல்லது குறைந்தபட்சம் ஏதாவது ஒரு தொழுகையில் ஒரு ஸஜ்தாவை கண்டிப்பாக இதற்காக செய்ய வேண்டும். அதில் துஆ செய்ய வேண்டும்**

---

**நிலைமைகள் அபாயகரமானவையாக உள்ளன**
**மேலும் மிகவும் அபாயகரமானதாக ஆகிக் கொண்டே செல்கின்றன**
**அரசாங்கத்திற்குரிய உடனடியான கோட்பாடு வகுக்கப்படவில்லையென்றால் பின்னர் உலகின் அழிவு தான்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 அக்டோபர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **வஃபா** மாதம் **27ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு எடுத்துரைக்கப்பட்டு வந்தது.அறிவிப்புகளில் ஹஸ்ரத் நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் தமது மகள் மற்றும் மருமகனுக்கு தொழுகையின் பக்கம் கவனமூட்டிய சம்பவம் புகாரியில் குறிப்பு இடம்பெற்றுள்ளது. ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஓர் இரவில் என்னிடமும், அன்னாரின் மகளான ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடமும் வருகை தந்தார்கள். மேலும் நீங்கள் இருவரும் (தஹஜ்ஜுத்) தொழுவதில்லையா? என்று கேட்டார்கள். அப்போது, நான் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களது உயிர்கள் அல்லாஹ்வின் கரத்தில் உள்ளன ; அவன் விரும்பும்போது எங்களை எழுப்புகின்றான். தஹஜ்ஜுதைக் குறித்து பேசப்பட்டு கொண்டிருக்கின்றது.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் (ஸல்) எங்களுக்கு எந்த பதிலும் வழங்கவில்லை. மேலும், திரும்பி சென்றுவிட்டார்கள். பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி சென்று கொண்டிருக்கும்போது,

وَكَانَ الْإِنْسَانُ أَكْثَرَ شَيْءٍ جَدَلًا

என்று தமது தொடையைத் தட்டியவாறு அன்னார் (ஸல்) கூறிக் கொண்டு இருந்ததை நான் செவியுற்றேன். பொருள்: மனிதன் மிகுதியாக தர்க்கம் செய்யக் கூடியவனாக இருக்கின்றான். (ஸஹீஹ் புகாரி, கிதாபுத் தஹஜ்ஜுத், ஹதீஸ்: 1127)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தின் விளக்கத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: ஒருமுறை அன்னார் (ஸல்) இரவில் தமது மருமகன் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் தமது மகள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோரின் இல்லத்திற்கு சென்றார்கள். மேலும், தஹஜ்ஜுத் தொழுகின்றீர்களா? என்று கேட்டார்கள். (தஹஜ்ஜுத் என்பது நடு இரவிற்கு அருகில் எழுந்து தொழப்படுகின்றது). அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தொழுவதற்கு நாங்கள் முயற்சியெல்லாம் செய்கின்றோம். ஆனால், இறைவனின் விருப்பத்தின் கீழ் எப்போதாவது எங்களது கண் அயர்ந்து விடுகின்றது. பின்னர் தொழுகை விடுபட்டு விடுகின்றது.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: தஹஜ்ஜுத் தொழுங்கள் என்று கூறிவிட்டு தமது வீட்டின் பக்கம் எழுந்து செல்ல துவங்கிவிட்டார்கள். மேலும், வழிப் பாதையில் وَكَانَ الْإِنْسَانُ أَكْثَرَ شَيْءٍ جَدَلًا என்று மீண்டும், மீண்டும் கூறிக் கொண்டே சென்று கொண்டிருந்தார்கள். இது திருக்குர்ஆனின் ஒரு வசனம் ஆகும். அதன் பொருள் இவ்வாறாகும்.மனிதன் பெரும்பாலும் தனது தவறுகளை ஒப்புக் கொள்வதற்கு தயங்குகின்றான். மேலும்,பல்வேறு வகையான சான்றுகளை கொடுத்து தனது குற்றங்களின் மீது திரையிடுகின்றான்.

எங்களிடம் எப்போதாவது தவறும் நிகழ்ந்து விடுகின்றது என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களும் கூறுவதற்கு பகரமாக, நாங்கள் கண்விழிக்கக் கூடாது என்பது அல்லாஹ்வின் நாட்டமாக இருக்கும்போது நாங்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றோம் என்று அவர்கள் ஏன் கூறினர்? மேலும் தங்களது தவறை ஏன் அல்லாஹ்வின் பக்கம் சுட்டிக் காட்டினர்? என்பது இதன் பொருளாக இருந்தது. (தீபாசா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 389 - 390)

இந்த விஷயத்தை மேலும் தெளிவாக எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமது ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள். அதிலிருந்து இந்த விஷயம் நிரூபணமாகின்றது. அதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எப்படிப்பட்ட பதில் அளித்தார்கள் என்றால் அதில் தர்க்கம் மற்றும் போட்டிக்கான வடிவம் இடம் பெற்றிருந்தது. மேலும், அன்னார் (ஸல்) கோபமடைவதற்கோ அல்லது அதிருப்தியை வெளிப்படுத்துவதற்கு பகரமாக எப்படிப்பட்ட நுட்பமான நடைமுறையை மேற்கொண்டார்கள் என்றால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அநேகமாக தமது வாழ்வின் இறுதி நாட்கள் வரை அதன் இனிமையின் சுவையை சுவைத்துக் கொண்டு இருந்திருப்பார்கள். அன்னார் என்ன இன்பத்தை சுவைத்திருப்பார்களோ அது அன்னாருக்கே உரியதாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விருப்பமின்மையின் அந்த வெளிப்பாட்டை அறிந்து தற்போது கூட நுட்பமான பார்வை கொண்ட ஒவ்வொருவரின் பார்வையும் ஆச்சரியத்தில் உறைந்து விடுகின்றது.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் இரவில் என்னிடமும், தமது புதல்வியான ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடமும் வருகை தந்தார்கள். மேலும், நீங்கள் தஹஜ்ஜுத் தொழுகின்றீர்களா என்ன? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களது உயிர்கள் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவன் எழுப்ப விரும்பும்போது எழுப்புகின்றான் நான் கூறினேன்.

இதனைக் கேட்டு அன்னார் (ஸல்) திரும்பிச் சென்றுவிட்டார்கள். மேலும்,என்னை எதுவும் கூறவில்லை. பின்னர் நான் அன்னார் (ஸல்) கூறுவதை நான் செவியுற்றேன். மேலும், முதுகை திருப்பிக் கொண்டு எழுந்து நின்று விட்டார்கள்; மேலும், மனிதனோ பெரும்பாலான விஷயங்களில் தர்க்கம் செய்ய துவங்கி விடுகின்றான் என்று அன்னார் (ஸல்) அவர்கள் தமது தொடையை தட்டியவாறு கூறிக்

கொண்டிருந்ததை நான் செவியுற்றேன்.

அல்லாஹ் ! அல்லாஹ் ! இந்த பதில் கொடுத்திருக்கக் கூடாது என்று எவ்வளவு நுட்பமான தொனியில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனை புரிய வைத்து விட்டார்கள்.வேறு ஒருவர் இருந்திருந்தால், முதலிலோ அவர்கள் எனது அந்தஸ்தையும், தகுதியையும் பாருங்கள். பின்னர் உமது பதிலையும் பாருங்கள்; இவ்வாறு எனது கூற்றை மறுத்து பேசுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளதா? என்று பாருங்கள்! என தர்க்கம் செய்ய அவர் துவங்கியிருப்பார். இவ்வாறு செய்யவில்லை என்றாலும் கூட, மனிதனின் நிர்பந்தம் ஆகும்; அவனது எல்லா செயல்களும் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அவன் விரும்பியபடி செயல்பட வைக்கின்றான்; அவன் விரும்பினால் தொழுகைக்கான நற்பேறை வழங்குகின்றான். இல்லை என்றால் வழங்குவதில்லை என்ற உமது இந்த வாதம் தவறானதாகும் என்று கூறியிருப்பார். மேலும், நிர்பந்தம் தொடர்பான விவகாரம் திருக்குர்ஆனிற்கு எதிரானதாகும் என்றும் அவர் கூறியிருப்பார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவை எல்லாவற்றையும் கூறியிருக்க முடியும். ஆனால், அன்னார் (ஸல்) இந்த இரண்டு வழிமுறைகளில் எதனையும் மேற்கொள்ளவில்லை. மேலும், அன்னார் (ரலி) மீது அதிருப்தி அடையவும் இல்லை ; தர்க்கம் செய்யவுமில்லை. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அன்னாருடைய தவறான கூற்றை உணர்த்தினார்கள்.

இன்னும் கூறப்போனல், ஒரு பக்கமாக விலகி அன்னாருடைய அந்த பதில் மீது இவ்வாறு ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார்கள். அதாவது, ஒவ்வொரு விஷயத்திலும் மனிதன் தனக்கு சாதகமாக ஏதாவதொரு அம்சத்தை எடுத்துக் கொண்டு தர்க்கம் செய்ய துவங்கி விடுகின்றான். மனிதனின் மீது வியப்பு ஏற்படுகின்றது என்று கூறி தமது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார்கள். உண்மையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த அளவிலான கூற்று தன்னகத்தே எப்படிப்பட்ட நன்மைகளை கொண்டிருந்தது என்றால், அதன் பத்தில் ஒரு மடங்கு நன்மை கூட வேறொருவரின் நூற்றுக்கணக்கான தர்க்கத்தின் மூலம் கிடைத்திருக்க முடியாது. இந்த ஹதீஸிலிருந்து நமக்கு ஏராளமான விஷயங்கள் தெரிய வருகின்றன.

இவற்றிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் பல்வேறு அம்சங்களின் மீது ஒளிபாய்ச்சுகின்ற என்னென்ன விஷயங்கள் தமக்கு தெரிய வந்தன? என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தொடர்ந்து பகுப்பாய்வு செய்திருக்கின்றார்கள். இந்த தருணத்திலேயே அதனையும் குறிப்பிட்டு விடுவதும் உகந்ததாக தெரிகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மார்க்க விஷயத்தில் எந்த அளவிற்கு அக்கறை இருந்ததென்றால் அன்னார் (ஸல்) இரவு நேரத்தில் வலம் சென்று தமது நெருங்கிய உறவினர்களை கருத்தில் கொண்டிருந்தார்கள் என்பது முதலில் தெரிய வருகின்றது.

ஏராளமான நபர்கள் இருக்கின்றனர். அவர்கள் தன்னளவில் நல்லவர்களாக இருக்கின்றனர். மக்களுக்கு நன்மையை போதிக்கவும் செய்கின்றனர். ஆனால், அவர்களின் குடும்பத்தின் நிலை மோசமானதாக இருக்கின்றது. தமது குடும்பத்தினர்களை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதில்லை. இத்தகைய மக்களைக் குறித்தே விளக்கின் கீழே இருள் என்ற பழமொழி பிரபலமானதாக இருக்கின்றது. அதாவது விளக்கு தன்னை சுற்றி இருக்கும் அனைத்து பொருட்களையும் ஒளிமயமாக்கி விடுகின்றது. ஆனால், சுயமே அதன் கீழ் இருள் இருக்கின்றது. இதேபோன்று இந்த மக்கள் மற்றவர்களுக்கு அறிவுரை செய்து கொண்டு நடக்கின்றனர். ஆனால், தமது ஒளியால் தங்களது சொந்த குடும்பத்தின் மக்கள் என்ன பயனடைந்து வருகின்றனர்? என்று தங்களது குடும்பத்தைக் குறித்து அவர்கள் கவலை கொள்வதில்லை. ஆனால், எந்த ஒளியின் மூலம் அன்னார் (ஸல்) உலகை ஒளிமயமாக்க விரும்பியிருந்தார்களோ அந்த ஒளியிலிருந்து தமது அன்பர்களும் ஒளிமயமாக வேண்டும் என்ற விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருத்தில் கொண்டிருந்தார்கள். மேலும், இதனை அன்னார் (ஸல்) ஆய்வும் செய்து வந்தார்கள். மேலும், அவர்களை சோதிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். மேலும், உறவினர்களின் தர்பிய்யத் ஓர் உயர் தரமான கலை ஆகும். அது அன்னாரிடத்தில் இல்லாமல் இருந்திருந்தால் பின்னர் அன்னாருடைய நல்லொழுக்கத்தில் ஒரு விலை மதிப்பற்ற அம்சத்தின் குறைவு இருந்திருக்கும்.

ஆனால், அன்னார் (ஸல்) உயர் நல்லொழுக்கத்தில் நிலைபெற்றிருந்தார்கள் என்பதால் இந்த கலையும் அன்னாரிடத்தில் நிறைவாக இருந்தது.

அன்னார் (ஸல்) உலகிற்கு முன்னால் எந்த போதனையை எடுத்து வைத்து வந்தார்களோ அந்த போதனையின் மீது அன்னாருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது என்ற இரண்டாவது விஷயம் தெரிய வருகின்றது. ஒரு நிமிடம் கூட அன்னார் (ஸல்) அதில் ஐயம் கொண்டிருக்கவில்லை. நவூதுபில்லாஹ்! உலகை ஏமாற்றுவதற்காகவும் தமது ஆதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகவும் அன்னார் (ஸல்) இந்த அனைத்து அமைப்புகளையும் உருவாக்கியிருந்தார்கள் என்று சில நபர்கள் ஆட்சேபனை செய்கின்றனர். இஸ்லாத்தின் எதிரிகள் இவ்வாறே ஆட்சேபனை செய்கின்றனர். அன்னாருக்கு வஹீ ஒன்றும் இறங்கயிருக்கவில்லை என்று கூறுகின்றனர்.

பலரும், ஓரியண்டலிஸ்ட்(எனும் மொழியியல் மற்றும் அகழ் ஆராய்ச்சி வல்லுநர்) களும் இவ்வாறே கூறுகின்றனர். மேலும், அந்த காலத்து காஃபிர்களும் இவ்வாறே கூறிவந்தனர். ஆனால் இது உண்மையல்ல. இன்னும் கூறப்போனால் அன்னாருக்கு தாம் தூதர் மற்றும் இறைவனால் நியமிக்கப்பட்டவர் என்பதில் எந்த அளவிற்கு உறுதியான நம்பிக்கை இருந்தது என்றால் அதற்கு நிகரான உதாரணம் உலகில் கிடைக்காது. ஏனெனில் மக்களுக்கு மத்தியில் பாசாங்கு செய்து அன்னார் தமது உண்மையை நிரூபித்துக் கொண்டார்கள் என்று ஒருவர் எண்ணம் கொள்ளக் கூடும்.

ஆனால், இரவு நேரத்தில் ஒரு சிறப்பு மிகு மனிதர் அதுவும் தமது மகள் மற்றும் மருமகனிடம் செல்கின்றார். மேலும், தங்கள் மீது கடமையாக்கப்படாத, இன்னும் கூறப்போனால் எதனை நிறைவேற்றுவது நம்பிக்கையாளர்களின் சொந்த நிலைமையில் விடப்பட்டுள்ளதோ அந்த இறை வணக்கங்களையும் அவர்கள் செய்கின்றார்களா? என்று அன்னார் (ஸல்) விசாரணை செய்கின்றார்கள். அந்தத் தொழுகை நடு இரவில் தூக்கத்தில் இருந்து எழுந்து நிறைவேற்றப்படுகின்றது.

அந்த (இரவு) நேரத்தில் அன்னார் (ஸல்) செல்வதும், நீங்கள் தஹஜ்ஜுத் தொழுகையையும் நிறைவேற்றுங்கள் என்று தமது மகள் மற்றும் மருமகனுக்கு அறிவுரை வழங்குவதும் அன்னாருடைய இந்த முழுமையான உறுதியை சுட்டிக் காட்டுகின்றது. அதாவது எந்த போதனையின் கீழ் அன்னார் (ஸல்) மக்களை வழிநடத்த விரும்பியிருந்தார்களோ அந்த போதனையின் மீது அன்னாருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது என்பதை சுட்டிக் காட்டுகின்றது. அவ்வாறில்லையென்றால், ஒரு போதனையின்படி நடப்பதும், நடக்காமல் இருப்பதும் சமமானதாகும் என்பதை அறிந்த ஒரு பொய்யர் தனது பிள்ளைகளுக்கும் இதுபோன்ற மறைமுகமான நேரத்தில் அந்த போதனையின் படி அமல் செய்வதற்கு அறிவுரை செய்ய மாட்டார். போதனையின் படி அமல் செய்வதும் அமல் செய்யாமல் இருப்பதும் ஒன்றுதான் என்று கருதுபவரால் தனது போதனையின்படி நடப்பதற்கு தனது பிள்ளைகளுக்கு அறிவுரை செய்ய முடியாது.

இந்த போதனையின் வழி நடக்காமல் சிறப்புகள் கிடைக்க முடியாது என்ற நம்பிக்கை ஒரு நபரின் உள்ளத்தில் இருக்கும்போதுதான் இது நடக்க முடியும்.

நான் எந்த விஷயத்தை நிரூபணம் செய்வதற்காக இந்த சம்பவத்தை எடுத்துரைத்துள்ளேனோ அதுவே மூன்றாவது விஷயம் ஆகும். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் புரிய வைப்பதற்காக பொறுமையை மேற்கொண்டு வந்தார்கள். மேலும், ஒருவருடன் சண்டையிடுவதற்கு பகரமாக அன்பு மற்றும் நேசத்துடன் அவருடைய தவறை உணர்த்தி வந்தார்கள்.

ஆக, அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கேள்வியை இவ்வாறு மறுக்க விரும்பினார்கள். அதாவது நாங்கள் தூங்கி விட்டால் பின்னர் நாங்கள் கண்விழிப்பது எங்களது இறைவனின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஏனெனில், தூங்கிக் கொண்டிருக்கும் நபரால் தன்னை கட்டுப்பாட்டில் வைக்க முடியாது. அவர் தூங்கிவிட்டால் பின்னர் இன்ன நேரம் வந்து விட்டது; இனி நான் இன்ன பணி செய்வேன் என்று அவருக்கு எப்படி தெரியும்? அல்லாஹ் (எங்களை) விழிக்கச் செய்து விட்டால் பின்னர் நாங்கள் தொழுது விடுகின்றோம். இல்லையென்றால் அது எங்கள் நிர்பந்தமாகும். (ஏனெனில், அக்காலத்தில் அலாரம் மற்றும் கடிகாரம் போன்றவை இருக்கவில்லை.)

இந்த விஷயத்தை கேட்டு விட்டு ஆச்சரியம் ஏற்படுகின்றது. ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆச்சரியம் ஏற்படவே செய்திருக்கும். ஏனெனில், அன்னாருடைய உள்ளத்தில் இருந்த ஈமான் என்பது ஒருபோதும் தஹஜ்ஜுத் தொழுகைக்கான நேரம் கடந்து அது குறித்து தாம் அறியாமல் இருக்கும் வகையில் அன்னாரை கவனமற்றவராக ஆக்கிவிடவில்லை. எனவேதான் தமது முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு , மனிதன் விஷயத்தை கேட்பதில்லை ; தர்க்கம் செய்கின்றான் என்று மட்டுமே அன்னார் (ஸல்) கூறிவிட்டார்கள். அதாவது நீங்கள் எதிர்வரும் காலத்தில் நேரம் வீணாகி விடாமல் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டுமே தவிர இவ்வாறு சமாளிக்கக் கூடாது. ஆக, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அதன் பின்னர் நான் ஒருபோதும் தஹஜ்ஜுத் தொழுகையை விட்டதில்லை. (ஸீரத்துன் நபீ (ஸல்), அன்வாருல் உலூம், தொகுதி 1, பக்கம் 584 - 590)

ஆக, தஹஜ்ஜுத் தொழுவதன் பக்கம் கவனமூட்டுவதற்காக நாம் இந்த சம்பவத்தை நினைவிற் கொள்ள வேண்டும். மேலும், குறிப்பாக முரப்பிமார்கள், வாழ்வை அர்ப்பணித்தவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் இந்த விஷயத்தின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இரவு நேரத் துஆக்கள் தான் அல்லாஹ்வின் அருட்களை அதிகமாக ஈர்க்கின்றன. மேலும், இன்றைய நாட்களிலோ உலகை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு

குறிப்பாக இதற்கான தேவை இருக்கின்றது.

அடுத்து, சம்பவங்களில் இரண்டாம் ஹிஜ்ரி ஆண்டில் நிகழ்ந்த பனூ கைனுகா போர் பற்றிய குறிப்பு வருகின்றது. இது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றுவிட்ட பிறகு அரேபியாவின் நிராகரிப்பாளர்களின் விவகாரம் ஒன்றாக இருக்கவில்லை. அவர்கள் மூன்று வகைகளில் பிரிந்து இருந்தனர். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் போர் செய்ய மாட்டோம்; அன்னாருக்கு எதிராக அன்னாருடைய எதிரிகளுக்கும் உதவி செய்ய மாட்டோம் என்ற நிபந்தனையின் கீழ் சமாதானம் செய்து கொண்டவர்கள் ஒரு பிரிவினராக இருந்தார்கள். பனூ குரைழா, பனூ நளீர் மற்றும் பனூ கைனுகா என்ற யூதர்களுடைய மூன்று கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் இந்த ஒப்பந்தத்தை செய்யக் கூடியவர்களாக இருந்தனர்.

இரண்டாவது வகையினர் எவரென்றால், அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பகைமை கொண்டிருந்தனர். அன்னாருக்கு எதிராக போர் செய்தனர். மேலும், அவர்கள் குறைஷிகளாக இருந்தனர். மூன்றாவது வகை மக்கள் எவரென்றால், அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விலகியிருந்த மக்கள் ஆவர். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முடிவிற்காக காத்திருந்தனர். உதாரணமாக, அரேபியாவின் மற்ற கோத்திரங்கள். அவர்களின் நிலைமைகளும் ஒன்றுபோல் இருக்கவில்லை. முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்து விடட்டும் என்று மனதிற்குள்ளேயே விரும்பிக் கொண்டிருந்த சில மக்களும் அவர்களில் இருந்தனர். உதாரணமாக, பனூ குஸாஆஃ கோத்திரம் ஆகும். சில மக்களின் விவகாரம் இதற்கு நேர் எதிரானதாக இருந்தது. உதாரணமாக, பனூ பக்ர் கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் ஆவர். இன்னும் வேறு சிலர் இருந்தனர். அவர்கள் வெளிப்படையில் முஸ்லிம்களுடன் இருந்தனர். ஆனால், அவர்களின் உள்ளம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எதிரிகளுக்கு ஆதரவாக இருந்தது. இவர்கள் நயவஞ்சகர்களாக இருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்தபோது அன்னார் (ஸல்) அனைத்து யூதர்களுடனும் உடன்படிக்கை செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் யூதர்களுக்கும் மத்தியில் இந்த உடன்படிக்கை எழுதப்பட்டிருந்தது. ஒவ்வொரு சமுதாயமும் தனது நட்புக் கோத்திரத்துடன் இணைந்து கொண்டது. அப்போது அன்னார் (ஸல்) தமக்கும் அவர்களுக்கும் மத்தியில் பாதுகாப்பு ஒப்பந்தத்தை எழுதினார்கள். அவற்றில் ஏராளமான நிபந்தனைகளை வகுத்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக அவர்கள் எந்த எதிரிக்கும் உதவி செய்ய மாட்டார்கள் என்ற நிபந்தனையும் அவற்றில் ஒன்றாக இருந்தது. (ஸுப்லுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 4, பக்கம் 179- தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993)

இதுவே ஒப்பந்தமாக இருந்தது. அப்போது குழப்பம் விளைவிக்கக் கூடிய கோத்திரமாக பனூ கைனுகா இருந்தது. அது தொடர்பாக வரலாற்றில் இருந்து சான்றுகளை எடுத்து கொண்டு வருகின்றார்கள். அதில் இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்: ஷாஸ் பின் கைஸ் என்ற பெயர் கொண்ட ஒரு கிழவன் இருந்தான். அவனது உள்ளம் முஸ்லிம்களுக்கு எதிரான பகைமை மற்றும் பொறாமையால் நிறைந்து இருந்தது. ஒருமுறை அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்துடன் தொடர்பு கொண்டிருந்த சில ஸஹாபிகள் ஒரு சபையில் ஒன்றாக அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஷாஸ் பின் கைஸ் அந்த இடத்தை கடந்து சென்றான். அந்த ஸஹாபிகள் இஸ்லாத்தின் மூலமாக அறிவீனமானக் காலத்தின் பகைமையை மறந்து தங்களுக்குள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்பு கொண்டிருப்பதையும், சமாதானத்துடன் இணைந்து அமர்ந்திருப்பதையும் அவன் பார்த்த போது அவன் கொந்தளித்து விட்டான். பனூ கைலா அதாவது அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரங்களின் தலைவர்கள் அந்த நகரத்தில் ஒன்றுபட்டிருந்தார்கள். ஒன்றுபட்டிருந்த அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர்களை நோக்கி அவன் இவ்வாறு வேண்டுமென்றே கூறினான்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த கண்ணியத்திற்குரிய நபர்கள் ஒன்றுபட்டு விட்ட பிறகு இனி நாங்கள் இவர்களுடன் வசிப்பதற்கு இங்கு எந்த இடமும் இல்லை. அவன் சண்டை மூட்டி விடுவதற்கு முயற்சி செய்தான். அவனுடன் ஓர் யூத இளைஞனும் இருந்தான். அவனிடம், நீ அவர்களிடம் செல்; மேலும் அவர்களுடன் அமர்ந்து கொள் என்று அவன் அவனுக்கு கட்டளையிட்டான். பின்னர், அவர்களுக்கு முன்னால் புஆஸ் போர் மற்றும் அதற்கு முன்னர் நிகழ்ந்த சம்பவங்களை நினைவுபடுத்தினான். மேலும், அது தொடர்பாக அவர்கள் தங்களுக்குள் கூறி வந்த கவிதைகளில் சில கவிதைகளை எடுத்துக் கூறினான். புஆஸ் போர் என்பது அறிவீனமானக் காலத்தில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரங்களுக்கிடையில் நடைபெற்றிருந்தது. அதில் அவஸ் கோத்திரத்திற்கு கஸ்ரஜ் கோத்திரத்தின் மீது வெற்றி கிடைத்திருந்தது. அந்த நேரத்தில் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவராக ஹுழைர் பின் ஸிமாக் அஷ்ஹலீ இருந்தார். இவர் ஹஸ்ரத் உஸைத் (ரலி) அவர்களின் தந்தையாக இருந்தார்.

கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவராக அம்ர் பின் நுஃமான் பயாளீ இருந்தார். இவர்கள் இருவரும் அந்தப் போரில் கொல்லப்பட்டிருந்தனர். அந்த யூத இளைஞர் முஸ்லிம்களுடன் அமர்ந்து கொண்டு அதே விஷயத்தை குறிப்பிட்டான். மேலும், நெருப்பை மூட்டினான். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தூங்கிக் கொண்டிருந்த பழைய உணர்ச்சிகளை மீண்டும் தூண்டி விட்டு விட்டான். மேலும், அவர்கள் கொந்தளித்து விட்டனர். அவர்களுக்கு மத்தியில் நீயா? நானா? என்ற சண்டை துவங்கி விட்டது. அவர்கள் பரஸ்பரம் சண்டையிடவும், ஒருவர் மற்றவர் மீது பெருமை கொள்ளவும் துவங்கி விட்டனர். மேலும், விஷயம் எந்த அளவிற்கு வளர்ந்து விட்டதென்றால், இரண்டு கோத்திரங்களில் இருந்தும் ஒருவர் மற்றவருக்கு எதிராக நேருக்கு நேர் முழங்காலிட்டு அமர்ந்து விட்டனர். மேலும் பரஸ்பரம் மோதலில் ஈடுபட்டு விட்டனர். மோதல் அதிகரித்து விட்டது. அவ்ஸ் கோத்திரத்தின் சார்பாக அவ்ஸ் பின் கைழீ இருந்தார். கஸ்ரஜ் கோத்திரத்தின் சார்பாக ஜப்பார் பின் ஸஹ்ர் என்பவர் இருந்தார். நீங்கள் விரும்பினால் அந்தப் போரை நாங்கள் தற்போது மீண்டும் துவங்கி, புதுப்பித்து விடுகிறோம் என்று வாக்குவாதத்தின் போது ஒருவர் மற்றவரிடம் கூறிவிட்டனர்.

ஆக, இரண்டு தரப்பு மக்களும் கோபம் அடைந்தனர். மேலும், நாங்கள் தயார் என்று கூறினர். அப்போது அவர்கள் ஒருபக்கம் முஸ்லிம்களாக ஆகியிருந்தனர். மற்றொரு பக்கம் இந்த அறிவீனமும் அத்துடன் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. பின்னர், நீங்கள் கொடுத்த வாக்குறுதிக்கான இடம் ஹர்ரஃ ஆகும் என்று கூறத் தொடங்கினர். மதீனா இரண்டு ஹர்ரஃக்களுக்கு மத்தியில் அமைந்துள்ள ஒரு ஹர்ரஃ ஆகும். பாறைகளைக் கொண்ட பூமியை ஹர்ரஃ என்று கூறுவார்கள். மேலும், கிழக்குப் பக்கத்தில் வாகிம் என்ற ஹர்ரஃ உள்ளது. மேலும் அதனை ஹர்ரஃ குறைழா என்றும் கூறுவார்கள்.இரண்டாவது ஹர்துல் வபுரஃ மேற்குப் பக்கம் உள்ளது. கிழக்குப் பக்கம் ஒன்று, மேற்குப் பக்கம் ஒன்று உள்ளது. இரண்டிற்கும் மத்தியிலும் மூன்று மைல் தொலைவு உள்ளது. இத்துடன் ஆயுதம்! ஆயுதம் ! என்ற இந்த கூச்சல் பரவி விட்டது. இதன் பிறகு சூழல் மிகவும் பதற்றமானதாகிவிட்டது. மேலும், இரண்டு தரப்பிலிருந்தும் மிக அழுத்தத்துடன் போருக்கான ஏற்பாடுகள் நடைபெற துவங்கின. இரண்டு கோத்திரங்களைச் சேர்ந்த மக்களும் குறித்த நேரத்தில் ஹர்ரஃவை நோக்கி புறப்படத் துவங்கினர். ஒரு குருதிப் போர் ஆரம்பமாகிவிடுவது சமீபமாக இருந்தது.ஆனால், அல்லாஹ்வின் செயல் இவ்வாறு இருந்தது. அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு இந்த அனைத்து நிலைமைகளைப் பற்றியும் தகவல் சென்றடைந்து விட்டது. செய்தியைக் கேட்டதும் அன்னார் (ஸல்) உடனடியாக முஹாஜிர் ஸஹாபிகளை தம்முடன் அழைத்துக் கொண்டு அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த மக்களிடம் வருகை தந்தார்கள். அன்னார் (ஸல்) மிகவும் மதிநுட்பம் வாய்ந்த தொனியில் அவர்கள் அனைவரையும் நோக்கி கூறினார்கள்: அல்லாஹ்! அல்லாஹ்! நான் இருக்கும்போதே அறிவீனமானக் காலத்தின் குரலா? அதுவும், அல்லாஹ் உங்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் வழிகாட்டிய பிறகா? இதன் மூலமாக அல்லாஹ் உங்களுக்கு கண்ணியமளித்துள்ளான். அவன் உங்களிடமிருந்து அறிவீனமானக் காலத்தின் தாக்கங்களை அழித்து விட்டான். உங்களுக்கு நிராகரிப்பிலிருந்து இரட்சிப்பு வழங்கியுள்ளான். மேலும், உங்களது உள்ளங்களில் நேசத்தை ஏற்படுத்தியுள்ளான். இந்த விஷயங்களுக்கு மத்தியிலும் நீங்கள் இந்த அறிவீனமான செயலை செய்து கொண்டிருக்கின்றீர்களா?

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இந்த உரையாடல் அவர்கள் மீது எப்படிப்பட்ட வலிமையான தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அவர்கள் தங்களது செயல்களின் மீது கடுமையான வெட்கத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும் அழத் துவங்கி விட்டார்கள். ஒருவர் மற்றவருடன் சண்டையிடுவதற்கும், மோதுவதற்கும் தயாராகிக் கொண்டிருந்த அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் ஆரத் தழுவிக் கொண்டார்கள். செவியேற்றோம்; கட்டுப்பட்டோம் என்பதை மீண்டும் வெளிப்படுத்தியவாறு இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் திரும்பி வந்து விட்டனர்.

இது ஸீரத் இப்னு ஹிஷ்ஷாமில் இடம் பெற்றுள்ள விளக்கமாகும். (ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 385 -386, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 2001)

யூதர்கள் புறமிருந்து உடன்படிக்கை மீறப்பட்டது தொடர்பாக எழுதுப்பட்டுள்ளது: பத்ர் போரில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு சிறப்பான வெற்றியை வழங்கினான். அப்போது அந்த மக்களின் கிளர்ச்சி தெளிவாக வெளிப்பட்டு விட்டது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் முஸ்லிம்களுடன் அவர்களுக்கு இருந்த பொறாமை வெளிப்பட்டு விட்டது. தங்களுடைய அந்த எரிச்சல் மற்றும்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

பகைமையின் காரணமாக அவர்கள் தங்களது ஒப்பந்தத்தை முறித்து விட்டனர்.

முஹம்மதே! நாங்கள் உங்களது சமுதாயத்தை போன்றவர்கள் என்று நீங்கள் எண்ணம் கொண்டுள்ளீரா? உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள்! நீங்கள் எப்படிப்பட்ட சமுதாயத்துடன் போர் புரிந்தீர்கள் என்றால் அவர்கள் போர்க் கலையை அறியாதவர்களாக இருந்தனர். மேலும், உங்களுக்கு அவர்கள் மீது வெற்றி கிடைத்து விட்டது. அதவாது பத்ர் போர் குறித்து சுட்டிக் காட்டியவாறு மக்காவின் நிராகரிப்பாளர்களை நீங்கள் தோற்கடித்து விட்டீர்கள்; ஆனால் நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்று அவர்கள் கூறத் துவங்கிவிட்டனர். நாங்களோ மிகவும் தைரியசாலிகள் ஆவோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் உங்களுடன் போர் புரிந்தால் பின்னர் ஆண் மக்கள் நாங்கள் ஆவோம் என்பது உங்களுக்கு தெரிய வரும். யூதர்களின் மூன்று கோத்திரங்களில் அன்னாருடன் முன்னர் செய்திருந்த உடன்படிக்கைக்கு முதலில் மாறு செய்து, நம்பிக்கை துரோகம் செய்த கோத்திரம் பனூ கைனுகாவைச் சேர்ந்த யூதர்களாக இருந்தனர். முஸ்லிம்களிடம் அவர்கள் செய்த சீண்டல்கள் மற்றும் விஷமத்தனத்தைக் குறித்து ஒரு சம்பவமும் எழுதப்பட்டுள்ளது.அது ஒரு முஸ்லிம் பெண்மணியுடன் நிகழ்ந்த சம்பவமாக இருந்தது. அது இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இறைத் தூதர் (ஸல்) அவர்களுடனான அவர்களின் பகைமையை வெளிப்படுத்துவதுடன் இந்த சம்பவமும் நிகழ்ந்தது. அதாவது, ஓர் அன்ஸாரி முஸ்லிமுடைய மனைவி தனது வணிகப் பொருட்களை எடுத்துக் கொண்டு பனூ கைனுகாவுடைய கடை வீதிக்கு சென்றிருந்தார். அதில் ஒட்டகம் மற்றும் ஆடுகள் போன்றவை இருந்தன. இந்த செல்வங்களை அவர் பனூ கைனுகாவினுடைய கடை வீதியில் விற்பனை செய்தார். மேலும், அதன் பிறகு அங்கேயே அந்த முஸ்லிம் பெண்மணி நகைகள் போன்றவை வாங்குவதற்காக ஓர் யூத நகைக் கொல்லனுக்கு அருகில் அவனது கடையில் அமர்ந்து விட்டார். அந்தப் பெண்மணி தமது உடலையும், முகத்தையும் மூடியிருந்தார். சில யூத கயவர்கள் அவரிடம் முகத்தை காட்டுமாறு நிர்பந்தித்துக் கொண்டிருந்தனர். அப்போது அந்தப் பெண்மணி மறுத்து விட்டார். எனவே அந்தக் கடைக்கார கொல்லன் எழுந்து சென்று அந்தப் பெண்மணியின் பர்காவின் ஒரு மூலையை இரகசியமாக அவரது முதுகின் பக்கம் ஒரு பொருளுடன் கட்டிவிட்டான் அல்லது ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகின்றது: அவன் சப்தமின்றி அவரது போர்வையின் ஒரு மூலையை ஒரு முள் அல்லது ஆணியுடன் கட்டிவிட்டான். அந்தப் பெண்மணி இதைக் குறித்து எதுவும் அறியாதவராக இருந்தார். மேலும் அவர் செல்வதற்காக எழுந்து நின்றபோது அவரது ஆடை சிக்கிக் கொண்டிருந்த காரணத்தினால் திறந்து விட்டது. மேலும், அவரது நிர்வாணம் வெளிப்பட்டு விட்டது. அப்போது யூதர்கள் நகையாடினர். அந்தப் பெண்மணி இந்த ஒழுங்கீனத்தைக் கண்டு கூச்சலிடத் தொடங்கி விட்டார். அருகில் ஒரு முஸ்லிம் கடந்து சென்று கொண்டிருந்தார். அவர் யூதர்களின் இந்த விஷமத்தனத்தைக் கண்ட உடனேயே அவர் அந்த யூதக் கொல்லன் மீது பாய்ந்தார். மேலும், வாளினால் அவரை கொலை செய்து விட்டார். இதைக் கண்ட யூதர்கள் அந்த முஸ்லிமின் மீது தாக்குதல் நடத்தினர். மேலும் அவரைக் கொன்று விட்டனர். இந்த சம்பவத்திற்கு பிறகு முஸ்லிம்களில் பனூ கைனுகாவைச் சேர்ந்த யூதர்களுக்கு எதிராக கடுமையான கோபமும், ஆத்திரமும் உருவாகி விட்டது. அன்னார் (ஸல்) கூறினார்கள்: இதுபோன்ற செயல்களுக்காக நமக்கும் அவர்களுக்குமிடையில் உடன்படிக்கை நடக்கவில்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் தோழர் ஆவேன். நான் இந்த காஃபிர்களுடனான உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்கின்றேன் என்று ஹஸ்ரத் உபாதஃ பின் ஸாமித் (ரலி) கூறினார்கள்:

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 284- தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு 2002-ம் ஆண்டு)

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ கைனுகா கோத்திரத்தாருக்கு புரிய வைக்க முயற்சி செய்தார்கள். ஆனால், அவர்களோ புரிவதற்கு பகரமாக வெளிப்படையான மிரட்டல்கள் விடுக்க துவங்கி விட்டனர்.

இதன் விளக்கம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பனூ கைனுகா கோத்திரத்தை ஒன்று கூட்டி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யூதர்களின் கூட்டத்தினரே! பத்ர் போர் சந்தர்ப்பத்தின் போது குறைஷிகள் மீது இறங்கிய அழிவைப் போன்ற அழிவு அல்லாஹ்வின் புறமிருந்து (உங்கள் மீது) இறங்குவதிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். எனவே நீங்கள் கட்டுப்பட்ட மக்களாக ஆகிவிடுங்கள். ஏனெனில், நான் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன் என்பதையும், இந்த உண்மை உங்கள் வேதத்தில் இடம் பெற்றிருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். மேலும், அல்லாஹ் உங்களிடம் வாங்கிய அந்த உடன்படிக்கையையும் நீங்கள் அறிவீர்கள்.

அவர்கள் கூறினர்: முஹம்மதே! (( ஸல்) ) அநேகமாக நாங்களும் உங்களது சமுதாயத்தைப் போன்ற சமுதாயத்தினர் ஆவோம்! என்று நீங்கள் கருதுகின்றீர்கள். அந்த ஏமாற்றத்தில் இருக்காதீர்கள். ஏனெனில், போர் மற்றும் அதன் வழிமுறைகளை அறிந்த சமுதாயத்தை நீங்கள் இதுவரை சந்திக்கவில்லை. எனவே நீங்கள் அவர்களை எளிதாக தோற்கடித்து விட்டீர்கள். ஆனால், இறைவன் மீது ஆணையாக ! நீங்கள் எங்களுடன் போர் செய்தீர்கள் என்றால் பின்னர் எப்படிப்பட்ட வீரம் செறிந்த நபர்களுடன் சண்டையிட்டு விட்டோம் என்பது உங்களுக்கு தெரிந்து விடும்.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது யூதர்கள் உடன்படிக்கையை முறித்த விஷயம் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது அன்னார் (ஸல்) யூதர்களை பனூ கைனுகாவின் கடை வீதியில் ஒன்று திரட்டி எச்சரிக்கை விடுத்திருந்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், அதற்கு அவர்களின் பதில் இப்படி இருந்தது. அதன் பிறகு பனூ கைனுகாவின் யூதர்கள் அங்கிருந்து சென்று கோட்டையினுள் அடைபட்டுக் கொண்டனர். இந்த விஷயங்கள் அனைத்தும் பேசப்பட்டதால் அவர்கள் சென்று விட்டனர். மேலும் தங்களது கோட்டைக்குள் சென்று விட்டனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள். மேலும், அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அபூலுபாபா (ரலி) அவர்களை மதீனாவில் தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடி வெண்மை நிறம் கொண்டதாக இருந்தது. மேலும், அதனை அன்னாருடைய சிறிய தந்தையார் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் உயர்த்தி பிடித்திருந்தார்கள். பனூ கைனுகா முற்றுகையிடப்பட்டார்கள். அதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அன்னார் (ஸல்) 15 நாட்கள் வரை பனூ கைனுகாவின் யூதர்களை கடுமையாக முற்றுகையிட்டிருந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) இந்த போருக்காக ஷவ்வால் மாதத்தின் 15-ம் தேதியன்று புறப்பட்டுச் சென்றார்கள். மேலும் துல்கஅதாவின் பிறை வரை அங்கேயே தங்கியிருந்தார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 285, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு- 2002-ம் ஆண்டு)

அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் முஸ்லிம்களின் மீதான மதிப்பச்சத்தை உருவாக்கினான். பனூ கைனுகாவின் அந்த யூதர்களில் 400 போர் வீரர்கள் இருந்தனர். அவர்கள் கோட்டையின் பாதுகாப்புப் பணியில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். மேலும், கவசம் அணிந்திருந்த 300 வீரர்கள் இருந்தனர். இறுதியில் முற்றுகையினால் துன்பத்திற்குள்ளாகி யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், எங்களுக்கு வழி விட்டு விட்டால் பின்னர் நாங்கள் மதீனாவில் இருந்து வெளியேறி நிரந்தரமாக சென்று விடுவோம். மேலும், எங்களது பெண்களையும், குழந்தைகள் மற்றும் நாங்கள் எங்களுடன் அழைத்து செல்லும் நபர்களையும் விட்டு விடுங்கள்; மற்ற செல்வங்களை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்.

மேலும், செல்வங்களில் ஆயுதங்கள் போன்றவையும் அடங்கும். அன்னார் (ஸல்) யூதர்களின் இந்த விஷயத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள். மேலும், அவர்களை மதீனாவில் இருந்து வெளியேறி செல்வதற்கு கட்டளை வழங்கினார்கள். ஸீரத்துல் ஹல்பியாவில் இவ்வாறு பதியப்பட்டுள்ளது.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 285 -287, தாருல் குதுபில் இல்மியா பதிப்பகம் பெய்ரூத், 2002-ம் ஆண்டு)

ஆனால் பெரும்பாலான வாழ்க்கை வரலாற்று நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூல் தொடர்பாக இந்த அறிவிப்பு உள்ளது. அதாவது அந்த சந்தர்ப்பத்தில் அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் மீண்டும், மீண்டும் ஆஜரானான். ஏனெனில், பனூ கைனுகாவின் நண்பனாக அவன் இருந்தான். எனவே அவன் மீண்டும், மீண்டும் பரிந்துரையும், விண்ணப்பமும் செய்தான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ கைனுகாவிற்கு மன்னிப்பு வழங்க வேண்டும்; மேலும் அவர்களை கொன்று விடக் கூடாது ; மேலும் மன்னித்து விட வேண்டும் என்ற விஷயத்தை அவன் பல்வேறு வழிமுறைகளில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். (ஸுப்லுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 4, பக்கம் 179 - 180 தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993)

அந்த மக்களை கொலை செய்வதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எண்ணம் கொண்டிருந்தார்கள்; மேலும் அப்துல்லாஹ் பின் உபையினுடைய தொடர் பரிந்துரையினால் அவர்களை மன்னித்து விட்டார்கள் என்ற தாக்கம் இந்த அறிவிப்பினால் உருவாகின்றது. ஆனால், இது சரியானது அல்ல.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் அவர்களின் பெண்களையும், குழந்தைகளையும் அல்லது அந்த மக்களையும் கொலை செய்வதற்கான எண்ணம் கொண்டிருக்கவில்லை. உண்மையில், இப்படிப்பட்ட அறிவிப்புகள் உள்ளபடியே சந்தேகத்திற்குரியவை ஆகும்.

ஆக, இதுபோன்ற அறிவிப்புகளை ஆய்வு செய்தவாறு ஸய்யது பரகாத் அஹ்மத் என்ற வரலாற்று ஆசிரியர் தமது நூலில் இவ்வாறு எழுதியுள்ளார். அதாவது யூதர்கள் ஆயுதங்களை கீழே போட்டு விட்ட பிறகு அப்துல்லாஹ் பின் உபை ஹுஸுர் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வந்தான். மேலும்,

என்னுடைய நபர்களிடம் மென்மையாக நடந்து கொள்ளுங்கள் என்று கூறினான். அப்போது, நீ நாசமடையவாயாக! நீ என்னை விட்டு விலகி விடு! என்று ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இப்னு உபை ஒருபோதும் பதில் கூறவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் என்னுடைய ஆட்களுடன் மென்மையுடன் நடந்து கொள்ளும் வரை நான் தங்களை செல்ல விடமாட்டேன்; தாங்கள் அவர்களை கொன்று விடுவீர்களா? இறைவன் மீது ஆணையாக! நிலைமைகள் மாறி விடும் என்று எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. என்று கூறினான்; அப்போது நல்ல விஷயம்; அப்படியென்றால் நீயே சென்று அவர்களை அழைத்து வா! என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இப்னு இஸ்ஹாக், வாக்தீ, இப்னு ஸஃது-இந்த மூவரும் இந்தக் கதையை எடுத்துரைக்கின்றனர். இந்த மூன்றையும் படிக்கும்போது ஒருவகையில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது அப்துல்லாஹ் பின் உபையினுடைய சிறிது தாக்கம் இருந்தது என்ற தோற்றம் எழுகின்றது. ஆனால், அப்துல்லாஹ் பின் உபையினுடைய பரிந்துரையின் சொற்களே சந்தேகத்திற்குரியவையாக தெரிகின்றன. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பனூ கைனுகா கோத்திரத்தை கொலை செய்யும் எண்ணம் கொண்டிருந்தார்கள் என்ற முடிவுக்கு வரக் கூடிய அளவில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு விஷயத்தை கூறினார்கள் என்று இப்னு இஸ்ஹாகினுடைய கூற்றில் இருந்து ஒருபோதும் வெளிப்படவில்லை. ஒரு வரலாற்று ஆசிரியரிடமிருந்து கூட இந்த விஷயம் நிரூபணமாகவில்லை. வாக்தீயின் கூற்றைப் பொருத்த வரை அதில் இதன் பக்கம் நிச்சயமாக சைகை கிடைக்கின்றது. மேலும், இதே விஷயத்தை இப்னு ஸஃதும் எடுத்துரைத்துள்ளார்.

ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு அரசியல் தலைவராகவும் இருந்தார்கள் என்றபோதிலும் கூட அன்னார் (ஸல்) தமது எதிரிகளுடன் ஆகுமற்ற கடுமையான வழிமுறையை ஒருபோதும் மேற்கொள்ளவில்லை என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் நாம் நிச்சயமாக நினைவிற் கொள்ள வேண்டும். அன்னார் (ஸல்) வன்முறையை வெறுத்து வந்தார்கள். மேலும், போர் மைதானத்திற்கு அன்னார் (ஸல்) சென்றாலும் கூட நிர்பந்தத்தின் காரணமாக சென்று வந்தார்கள். மேலும், அங்கும் கூட மனித இரத்தம் சிந்தப்படுவதை தவிர்த்து வந்தார்கள்.

(ஸய்யது பரகாத் அஹ்மத் அவர்களின் நூல்- ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹிஜாஸின் யூதர்களும், பக்கம் 98 - 99, மக்தபா ஆலியா லாஹூர்)

எவ்வாறு இருப்பினும், முற்றுகையிடுதல் நிகழ்ந்திருந்தது. அவர்கள் அடைக்கலம் வேண்டவும் செய்திருந்தார்கள். எனவே பனூ கைனுகா நாடு கடத்தப்படவும் பட்டார்கள். இதன் விளக்கம் இவ்வாறு உள்ளது. அந்த யூதக் கோத்திரத்தின் விண்ணப்பத்திற்கேற்ப அவர்களை நாடு கடத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டது. மேலும், யூதர்களை மதீனாவில் இருந்து நாடு கடத்துவதற்கான பொறுப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபாதஃ பின் ஸாமித் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேலும் மதீனாவில் இருந்து மூன்று நாட்களுக்குள் வெளியேறுவதற்கு காலக்கெடு கொடுக்கப்பட்டது. ஆக, அவர்கள் மூன்று நாட்களில் மதீனாவில் இருந்து சென்று விட்டார்கள்.

கூடுதல் காலக்கெடு அளிக்கும்படி யூதர்கள் உபாதஃ (ரலி) அவர்களிடம் வேண்டினார்கள். ஆனால், அன்னார் (ரலி) ஒரு மணி நேர காலக்கெடுவைக் கூட கூடுதலாக கொடுக்கவில்லை. மேலும், தமது மேற்பார்வையில் அவர்களை நாடு கடத்தினார்கள். இந்த மக்கள் இங்கிருந்து வெளியேறி சிரியாவின் பக்கம் அமைந்திருந்த ஒரு நகரமான அஸ்ரிஆத்துடைய பகுதிகளில் சென்று விட்டார்கள். நாடுகடத்துவதற்கான பொறுப்பில் ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்ற ஒரு கூற்றும் உள்ளது. இந்த இருவரிடமும் அந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதும் முற்றிலும் சாத்தியம் ஆகும்.

எவ்வாறு இருப்பினும், அந்த மக்கள் அங்கு சென்று விட்டனர். அப்போது யூதர்களின் வீடுகளில் இருந்து நிறைய ஆயுதங்கள் கிடைத்தன. ஏனெனில், யூதர்களில் எல்லோரையும் விட இந்த மக்கள் மிகவும் செல்வந்தர்களாகவும், எல்லாரையும் விட மிகவும் தைரியசாலிகளாகவும், போர் புரியும் மக்களாகவும் இருந்தனர். அவர்களுடைய ஆயுதங்களில் தமக்காக மூன்று வில்லையும், இரண்டு போர் கவசங்களையும், மூன்று வாள்களையும் மேலும் மூன்று ஈட்டிகளையும் அன்னார் (ஸல்) தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். வில்களின் பெயர்கள் கதூம், ரவ்ஹா மற்றும் பைழாஃ ஆகும். கதூம் என்ற வில் உஹது போரில் உடைந்து விட்டது. ஸக்தியா மற்றும் ஃபிழ்ழா என்பது இரண்டு போர் கவசங்களின் பெயர்கள் ஆகும். இதேபோன்று மூன்று ஈட்டிகளும், மூன்று வாள்கயும் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். ஒரு வாள் கிலஈ என்றும் மற்றொன்று பத்தார் என்றும் கூறப்படுகின்றது. மூன்றாவது வாளுக்கு எந்தப் பெயரும் இருக்கவில்லை. இது ஸீரத் ஹல்பியாவின் அறிவிப்பு ஆகும். ( அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 287, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2002,) (முஃஜமுல் பல்தான், தொகுதி 1, பக்கம் 165, அல்மக்தபத்துல் அஸ்ரியா)

பனூ கைனுகாவின் போர்களைப் பற்றிய குறிப்பு ஸீரத் காத்தமுன்நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வருகை தந்த அந்த நேரத்தில் மதீனாவில் யூதர்களின் மூன்று கோத்திரங்கள் வசித்து வந்தன. பனூ கைனுகா, பனூ நளீர் மற்றும் பனூ குறைழா என்பது அவற்றின் பெயர்களாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்த உடனேயே இந்தக் கோத்திரங்களுடன் அமைதி ஒப்பந்தங்களை செய்து கொண்டார்கள். மேலும், பரஸ்பரம் அமைதி மற்றும் சமாதானத்துடன் வசிப்பதற்கான அடித்தளம் அமைத்தார்கள். ஒப்பந்தத்தின் அடிப்படையில் மதீனாவில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுவதில் இருதரப்பும் பொறுப்பாளிகளாக இருந்தனர்; மேலும், ஒருவேளை வெளியில் இருந்து எதிரிகள் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தினால் பின்னர் அனைவரும் இணைந்து அதனை எதிர் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் யூதர்கள் இந்த ஒப்பந்தத்தை பேணி நடந்தனர். மேலும், குறைந்தபட்சம் வெளிப்படையாக அவர்கள் முஸ்லிம்களுடன் எந்த சண்டையையும் உருவாக்கவில்லை. ஆனால், மதீனாவில் முஸ்லிம்கள் அதிகமாக அதிகாரம் பெற்றுக் கொண்டே செல்கின்றனர் என்பதை அவர்கள் பார்த்தபோது பின்னர் அவர்களின் நடத்தை மாறத் துவங்கி விட்டது. மேலும், அதிகரித்து வந்த முஸ்லிம்களின் இந்த வலிமையை அவர்கள் தடுப்பதற்கு முடிவெடுத்தனர். மேலும், இந்த நோக்கத்திற்காக அவர்கள் எல்லா வகையான ஆகுமான மற்றும் ஆகுமற்ற திட்டங்களையும் தீட்டத் துவங்கி விட்டனர். எந்த அளவுக்கு என்றால், முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினையை உருவாக்கி உள்நாட்டுப் போரை துவங்கி விடுவதற்கு கூட அவர்கள் முயற்சி செய்ய தயங்கவில்லை.

ஆக, அறிவிப்பில் வருகின்றது: ஒரு சந்தர்ப்பத்தில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் ஏராளமான மக்கள் ஒன்றுகூடி அமர்ந்திருந்தார்கள் அல்லது பரஸ்பர நேசத்துடன் ஒற்றுமையுடன் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது குழப்பம் விளைவிக்கக் கூடிய யூதன் ஒருவன் அந்த சபையில் சென்றடைந்து புஆஸ் போரை நினைவூட்ட துவங்கி விட்டான். இது எப்படிப்பட்ட போராக இருந்தது என்றால் இவ்விரு கோத்திரங்களுக்கு மத்தியிலும் ஹிஜ்ரத்திற்கு சில வருடங்களுக்கு முன்பு அது நிகழ்ந்திருந்தது. மேலும், ஏற்கனவே விளக்கமாக கூறப்பட்டு விட்டது போன்று அதில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த ஏராளமான மக்கள் ஒருவர் மற்றவரின் கைகளால் கொல்லப்பட்டிருந்தனர்.

அந்த போரைக் குறித்து குறிப்பிடப்பட்டதும் சில அறிவீனமான மக்களின் உள்ளங்களில் பழைய நினைவு புதுப்பிக்கப்பட்டது. மேலும், முந்தைய பகைமையின காட்சிகள் கண்களுக்கு முன்னால் வந்து விட்டன. விளைவு என்னவாயிற்று என்றால், அவர்களுக்குள் பரஸ்பர சண்டை மற்றும் ஏச்சு பேச்சுகளை கடந்து நிலைமை எங்கு சென்றடைந்து விட்டது என்றால் அதே சபையில் முஸ்லிம்களுக்குள் வாள்கள் உருவப்பட்டன. ஆனால், நல்லவேளையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு குறித்த நேரத்தில் தகவல் சென்றடைந்து விட்டது. மேலும் அன்னார் (ஸல்) முஹாஜிர் ஸஹாபிகளின் ஒரு கூட்டத்தை அழைத்துக் கொண்டு உடனடியாக நிகழ்விடத்திற்கு வருகை தந்து விட்டார்கள். மேலும், இருதரப்பிற்கும் விஷயத்தை புரிய வைத்து பதற்றத்தை தணித்து விட்டார்கள். பின்னர் கண்டித்தார்கள்.நான் இருக்கும்போதே நீங்கள் அறீவீனத்தின் வழிமுறையை மேற்கொள்கின்றீர்களா? மேலும், இறைவனின் இந்த அருளுக்கு நீங்கள் கண்ணியம் அளிப்பதில்லையா? அவன் இஸ்லாத்தின்மூலமாக உங்களை சகோதரர்களாக ஆக்கிவிட்டான்.

இதனால் அன்ஸார் மக்கள் மீது எந்த அளவிற்கு தாக்கம் ஏற்பட்டது என்றால், அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. மேலும், அவர்கள் தங்களுடைய அந்த செயலுக்காக தவ்பா செய்து ஒருவர் மற்றவரை ஆரத் தழுவிக் கொண்டார்கள்.

பத்ர் போர் நடந்து முடிந்த உடன் மேலும் முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், மேலும் எந்த போர் தளவாடங்களும் இல்லாத நிலையிலும் அல்லாஹ் தனது அருளால் குறைஷியர்களுடைய ஒரு பெரும் படையின் மீது முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். மேலும், மக்காவின் பெரும்,

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பெரும் தலைவர்கள் மண்ணில் புதையுண்டு விட்டார்கள். இதனால் மதீனத்து யூதர்களின் பொறாமையின் நெருப்பு பற்றி எரிந்தது. மேலும், அவர்கள் முஸ்லிம்களுடன் வெளிப்படையான மோதல் போக்கை கைகொள்ள துவங்கி விட்டனர். மேலும், குறைஷிய படைகளை தோற்கடித்ததில் என்ன பெரிய விஷயம் இருக்கின்றது? எங்களுடன் முஹம்மது (ஸல்) மோதினால் பின்னர் போர் எவ்வாறு புரிய வேண்டும்? என்பதை நாங்கள் கற்றுக் கொடுப்போம் என்று சபைகளில் பகிரங்கமாக கூறத் துவங்கினர். எந்த அளவிற்கு என்றால், அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்திற்கு முன்னால் இதுபோன்ற சொற்களை கூறினர்.

ஆக, அறிவிப்பில் வருகின்றது: பத்ர் போருக்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது அன்னார் (ஸல்) ஒருநாள் யூதர்களை ஒன்று கூட்டி அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். மேலும், தமது வாதத்தை முன்வைத்து இஸ்லாத்திற்கான அழைப்பை விடுத்தார்கள். அன்னாருடைய அமைதி நிறைந்த மற்றும் அனுதாபம் மிக்க சொற்பொழிவிற்கு யூதத் தலைவர்கள் இந்த சொற்களில் பதில் அளித்தார்கள்: முஹம்மதே (ஸல்) ! நீங்கள் அநேகமாக குறைஷியர்களை கொன்று விட்டு ஆணவம் கொள்கின்றீர்கள்; அந்த மக்களோ போர்க் கலையை அறியாதவர்களாக இருந்தனர். எங்களுடன் போர் புரிந்தால் பின்னர் போர் புரிபவர்கள் எப்படி இருப்பார்கள்? என்பது உங்களுக்கு தெரிய வரும்.

யூதர்கள் பகிரங்கமான மிரட்டலோடு மட்டும் நின்றுவிடவில்லை. மாறாக, அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கும் திட்டங்களை தீட்டத் துவங்கியிருந்தனர் என்று தெரிய வருகின்றது.

ஏனெனில், அறிவிப்பில் வருகின்றது: அந்த நாட்களில் ஒரு தூய ஸஹாபியான தல்ஹா பின் பராஃ (ரலி) அவர்கள் மரணமடையும் போது இவ்வாறு வஸிய்யத் செய்திருந்தார்கள். அதாவது, ஒருவேளை நான் இரவில் மரணித்து விட்டால் பின்னர் ஜனாஸா தொழுகைக்காக ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களுக்கு தகவல் கொடுக்க வேண்டாம்.ஏனெனில், எனது காரணத்தால் அன்னார் (ஸல்) மீது யூதர்களின் புறமிருந்து ஏதாவது ஆபத்து நேர்ந்து விடக் கூடாது என்று அன்னார் (ரலி) வஸிய்யத் செய்திருந்தார்கள்.

சுருக்கமாக, பத்ர் போருக்கு பிறகு யூதர்கள் பகிரங்கமாக தொல்லைகள் கொடுக்கத் துவங்கி விட்டனர். மதீனத்து யூதர்களில் அனைவரையும் விட அதிக வலிமை மிக்கவர்களாகவும், போர் வீரர்களாகவும் பனூ கைனுகா கோத்திரத்தினர் இருந்தனர். எனவே முதல் முதலில் அவர்களின் புறமிருந்தே உடன்படிகையை முறித்தல் எனும் செயல் துவங்கியது.

ஆக, வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகின்றனர்:

யூதர்களுக்கும்,ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குமிடையில் செய்யப்பட்டிருந்த அந்த உடன்படிக்கையை மதீனத்து யூதர்களில் எல்லாரையும் விட முதலில் பனூ கைனுகா கோத்திரம் தான் முறித்தது. மேலும், பத்ர்ப் போருக்கு பிறகு அவர்கள் மிகவும் கிளர்ச்சி செய்ய துவங்கி விட்டனர். மேலும், பகிரங்கமாக பகைமை மற்றும் பொறாமையினை வெளிப்படுத்தினர். மேலும் உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டனர். ஆனால், இதுபோன்ற விஷயங்களுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் தங்களது எஜமானரின் வழிகாட்டலின் கீழ் எல்லா வகையிலும் பொறுமையுடன் செயல்பட்டனர். மேலும், தங்கள் புறமிருந்து எந்த முதல் தாக்குதலும் நடைபெறாமல் பார்த்துக் கொண்டனர். ஆனால், ஹதீஸில் வருகின்றது: யூதர்களுடன் நடைபெற்றிருந்த அந்த உடன்படிக்கைக்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பாக யூதர்களின் மீது அதிகமான பரிவு காட்டினார்கள்.

அவர்களின் புறமிருந்து பகைமையின் நடவடிக்கை இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புறமிருந்து நேசத்திற்குரிய நடவடிக்கை இருந்தது. ஆக, ஒருமுறை ஒரு முஸ்லிமிற்கும், ஒரு யூதருக்குமிடையில் சில கருத்துவேறுபாடு ஏற்பட்டு விட்டது. ஹஸ்ரத் மூஸா (அலை) அனைத்து நபிமார்களை விடவும் சிறந்தவர் ஆவார் என்று ஓர் யூதர் எடுத்துரைத்தார். ஸஹாபிக்கு கோபம் வந்து விட்டது. மேலும் அந்த யூதருடன் சற்று கடுமையாக நடந்து விட்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே அனைத்து தூதர்களிலும் சிறந்தவர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தை பற்றி தகவல் கிடைத்த போது அன்னாரோ கோபமடைந்தார்கள். மேலும், அந்த ஸஹாபியைக் கண்டித்தார்கள். மேலும், கூறினார்கள்: இறைத் தூதர்களில் ஒருவர் மற்றவரை விட சிறந்தவர் என்று எடுத்துரைத்துக் கொண்டு திரிவது உங்களுடைய வேலையல்ல என்று கூறினார்கள்.

பின்னர், மூஸா (அலை) அவர்களின் ஓர் அம்சத்தின் சிறப்பை அன்னார் (ஸல்) எடுத்துரைத்து அந்த யூதரின் மனதை குளிரச் செய்தார்கள். ஆனால், இவ்வாறு அவர்களின் மனதை மகிழ்ச்சியடையச் செய்யும் வகையில் நடந்து கொண்ட போதிலும் யூதர்கள் தங்களது தீங்கிழைக்கும் செயல்களில் முன்னேறிக் கொண்டே சென்றனர். மேலும், இறுதியில், யூதர்களின் புறமிருந்தே போருக்கான காரணி உருவானது. மேலும், அவர்களின் உள்ளத்து பகைமை நெஞ்சுக்குள்ளே அடைபட்டிருக்கவில்லை. மேலும், அது இவ்வாறு வெளிப்பட்டது. அதாவது, ஒரு முஸ்லிம் பெண்மணி கடை வீதியில் ஓர் யூதனின் கடைக்கு சில பொருளை வாங்குவதற்காக சென்றிருந்தார். ஏற்கனவே இது விளக்கமாக கூறப்பட்டு விட்டது.

அந்த நேரத்தில் அந்தக் கடையில் அமர்ந்திருந்த சில யூதக் கயவர்கள் அந்தப் பெண்மணியை மிகவும் ஆபாசமான முறையில் சீண்டினர். மேலும், அந்தப் பெண்மணியின் கீழாடையின் அடிப்பகுதியின் நுனியை அந்தப் பெண் அறியாதிருந்த நிலையில் ஒரு முள் போன்ற பொருளுடன் அவரது முதுகுப் பகுதியின் ஆடையில் அந்தக் கடைக்காரனே கட்டி வைத்து விட்டான். அதன் விளைவு என்னவாயிற்று என்றால், அவர்களின் ஆபாசமான வழிமுறையைக் கண்டு அந்தப் பெண்மணி அங்கிருந்து எழுந்து வீட்டிற்கு திரும்புவதற்கு முற்பட்டபோது அவர் நிர்வாணமாகி விட்டார். அப்போது, அந்த யூதக் கடைக்காரனும் அவனது கூட்டாளிகளும் மிகவும் சிரித்தனர்.மேலும் நகையாடினர். முஸ்லிம் பெண்மணி பெருத்த அவமானத்திற்குள்ளாகி கூச்சலிட்டார். மேலும் உதவிக்காக அழைத்தார். தற்செயலாக ஒரு முஸ்லிம் அந்நேரத்தில் அருகில் இருந்தார். அவர் சம்பவ இடத்திற்கு உடனடியாக வந்தடைந்தார். மேலும், பரஸ்பர சண்டையில் அந்த யூதக் கடைக்காரனை கொன்று விட்டார்.அப்போது நாலாப்புறமிருந்தும் அந்த முஸ்லிம் வாள்களால் தாக்கப்பட்டார். மேலும், அந்த தன்மானம் மிக்க முஸ்லிம் அங்கேயே சரிந்து விட்டார். முஸ்லிம்களுக்கு இந்த சம்பவத்தை பற்றி தெரிய வந்தபோது சமுதாயத்தின் மீதான தன்மானத்தால் அவர்களின் கண்களில் இரத்தம் வந்து விட்டது. மேலும், மற்றொரு பக்கம் யூதர்கள் இந்த சம்பவத்தை போர் புரிவதற்கான சாக்குபோக்காக ஆக்க விரும்பியிருந்தனர். கூட்டமாக ஒன்றுகூடினர். மேலும், ஒரு பதற்றமான நிலவரம் உருவானது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த தகவல் கிடைத்தபோது, அன்னார் பனூ கைனுகாவின் தலைவர்களை ஒன்று கூட்டி, இந்த வழிமுறை சரியானது அல்ல என்று கூறினார்கள். இங்கு அன்னாருடைய வழிமுறையைப் பாருங்கள்! எப்படியாவது இந்த விவகாரத்தை தணிக்க வேண்டும் என்று அன்னார் (ஸல்) முயற்சி செய்தார்கள்.

நீங்கள் இந்த விஷமத்தனத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள். மேலும், இறைவனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள் என்று அன்னார் (ஸல்) அறிவுரை செய்தார்கள். அவர்கள் வருத்தம் தெரிவிப்பதற்கும், வெட்கப்படுவதற்கும், மன்னிப்பு கேட்பதற்கும் பகரமாக அவர்கள் அன்னாருக்கு முன்னால் மிகவும் இறுமாப்புடன் பதில் கொடுத்தனர். அதாவது, மிகவும் கட்டுப்படாமை மற்றும் கிளர்ச்சியை வெளிப்படுத்தக் கூடிய பதிலைக் கொடுத்தனர்.

பின்னர், பத்ர் போர் வெற்றியில் ஆணவம் கொள்ளாதீர்கள்; எங்களுடன் மோதும்போது போர் புரிபவர்கள் எப்படி இருப்பார்கள் என்பது உங்களுக்கு தெரிந்து விடும் என்று மீண்டும் அதே மிரட்டல்களை விடுத்தனர். எனவே வேறு வழியில்லாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் ஸஹாபிகளின் ஒரு குழுவினரை அழைத்துக் கொண்டு பனூ கைனுகாவினுடைய கோட்டைகளை நோக்கி புறப்பட்டார்கள். அவர்கள் தங்களது செயலுக்கு வருந்துவதற்கு இது இறுதி வாய்ப்பாக இருந்தது. அன்னார் (ஸல்) புறப்பட்டபோது கூட அவர்கள் மன்னிப்பு கேட்டு விஷயத்தை முடித்திருக்கலாம். ஆனால், அவர்கள் போருக்காக தயாராகிவிட்டனர்.

சுருக்கமாக, போருக்கான அறிவிப்பு செய்யப்பட்டது. மேலும், இஸ்லாம் மற்றும் யூதத்துவ சக்திகள் ஒருவர் மற்றவருக்கு எதிரில் வந்தனர். அந்த காலத்து சட்டங்களுக்கு ஏற்ப போருக்கான ஒரு வழிமுறையும் இருந்தது. அதாவது, தங்களது கோட்டைகளில் பாதுகாப்பாக அமர்ந்து கொள்வார்கள். மேலும், எதிர் தரப்பு கோட்டையை முற்றுகையிட்டு விடும். மேலும், ஒருவர் மற்றவருக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருப்பார்கள். எந்த அளவுக்கு என்றால், ஒன்று முற்றுகையிடக் கூடிய படை கோட்டையை கைப்பற்றுவதிலிருந்து நிராசையடைந்து முற்றுகையை விலக்கிக் கொண்டு விடும். மேலும், முற்றுகையிடப்பட்டவர்கள் வெற்றி பெற்றவர்களாக கருதப்படுவர். அல்லது முற்றுகையிடப்பட்டவர்கள் சண்டையை எதிர் கொள்ள முடியாமல் கோட்டையின் வாசலை திறந்து தங்களை தாங்களே வெற்றியாளர்களிடம் ஒப்படைத்து விடுவார்கள். இந்த சந்தர்ப்பத்திலும் பனூ கைனுகா இதே வழிமுறையையே மேற்கொண்டது. மேலும், தங்களது கோட்டைகளை அடைத்துக் கொண்டு உள்ளே அமர்ந்து கொண்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை முற்றுகையிட்டார்கள். மேலும், பதினைந்து நாட்கள் வரை முற்றுகை தொடர்ந்து கொண்டிருந்தது. இறுதியில் பனூ கைனுகாவினுடைய அனைத்து வலிமையும், ஆணவமும் உடைந்து போனது. அப்போது, எங்களது செல்வங்கள் முஸ்லிம்களுக்கு சொந்தமாகி விடும்; ஆனால் எங்களது உயிர்கள் மற்றும் எங்களது மனைவி, பிள்ளைகள் மீது முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும் இருக்காது என்ற இந்த நிபந்தனையின் கீழ் அவர்கள் தங்களது கோட்டைகளின் வாயில்களை திறந்து விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். ஏனெனில், மூஸவிய்ய ஷரீஅத்தின் அடிப்படையில் இந்த மக்கள்

அனைவரும் கொலைக் குற்றவாளிகளாக இருந்தனர். மேலும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த மக்கள் மீது மூஸவிய்ய ஷரீஅத்தின் தீர்ப்பே நிறைவேற வேண்டியிருந்தது. ஆனால், இது அந்த சமுதாயத்தின் முதல் குற்றமாக இருந்தது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மீண்டும் மீண்டும் கருணை காட்டக் கூடிய மற்றும் பரிவு மிக்க இயல்பு இறுதி சிகிச்சையாக இருந்த உச்சபட்ச தண்டையினை ஆரம்பகட்டத்தில் கொடுக்கவில்லை. ஆயினும், மற்றொரு பக்கம் இப்படிப்பட்ட உடன்படிக்கைக்கு மாறு செய்யக் கூடிய மற்றும் பகைமையுணர்வு கொண்ட ஒரு கோத்திரம் மதீனாவில் வசிப்பதும் விஷப் பாம்பை அருகில் வைத்திருப்பதற்கு குறைவானதாக இருக்கவில்லை. குறிப்பாக அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தில் ஒரு நயவஞ்சகக் கூட்டம் ஏற்கனவே மதீனாவில் இருந்தது. மேலும், வெளிப்புறத்தில் இருந்து முழு அரேபியாவின் எதிர்ப்பும் முஸ்லிம்களை மூச்சுத் திணற வைத்திருந்தது. ஆக இந்த நிலையிலும் அவர்கள் அங்கு வசிப்பது அபாயகரமானதாக இருந்தது. அதுபோன்ற நிலைமைகளில் பனூ கைனுகா மதீனாவில் இருந்து வெளியேறி விட வேண்டும் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முடிவாக இருந்திருக்க முடியும். இந்தத் தண்டனை அவர்களின் குற்றத்திற்கு எதிரில் மேலும், அந்த காலத்தின் நிலைமைகளை வைத்து பார்க்கும்போது மிகவும் மென்மையான ஒரு தண்டனையாக இருந்தது. உண்மையில் இதில் தற்காப்பு அம்சம் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. ஏனெனில், அரேபியாவின் நாடோடி சமுதாயங்களை பொருத்த வரை இடம் பெயர்ந்து செல்லுதல் என்பது ஒன்றும் பெரிய விஷயம் கிடையாது. குறிப்பாக, பனூ கைனுகாவிற்கு இல்லாதது போன்று ஒரு கோத்திரத்தின் சொத்துக்கள் நிலங்கள் மற்றும் தோட்டங்களின் வடிவில் இல்லாத நிலையில் அது ஒரு பெரிய விஷயம் கிடையாது. பனூ கைனுகாவின் சொத்துகளில் எந்தவொரு சொத்தும் அசையா சொத்தாக இருந்திருக்கவில்லை. நிலங்கள் அல்லது அவர்கள் சார்ந்திருந்த சொத்துகள் என்று அவர்களுக்கு எதுவும் இருக்கவில்லை. பின்னர், முழு கோத்திரத்திற்கும் பெரும் அமைதியுடனும், பாதுகாப்புடனும் ஓரிடத்தை விட்டு விட்டு வேறு இடத்திற்கு சென்று வசிப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைத்து விட்டது. ஆக, பனூ கைனுகா பெரும் மனநிறைவுடன் மதீனாவை விட்டு விட்டு சிரியாவின் பக்கம் சென்று விட்டார்கள். அவர்களின் புறப்பாடு தொடர்பான உரிய ஏற்பாடு மற்றும் கண்காணிப்பு போன்ற பணிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபி ஹஸ்ரத் உபாதஃ பின் ஸாமித் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்து இருந்தார்கள். அன்னார் அந்த கோத்திரத்தின் நட்புக்குரியவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) பனூ கைனுகாவினுடைய நட்புக் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். ஆக, உபாதஃ பின் ஸாமித் (ரலி) அவர்கள் சில இடங்கள் வரை பனூ கைனுகாவுடன் சென்றார்கள். மேலும் பின்னர் அவர்களை பாதுகாப்புடன் வேறு இடத்திற்கு அனுப்பி வைத்து விட்டு திரும்பி வந்து விட்டார்கள். முஸ்லிம்களின் கைகளுக்கு வந்த போர் செல்வங்களில் போர் தளவாடங்களையும், நகைத் தொழிலுக்கான கருவிகளையும் உள்ளடக்கி இருந்தன.

தங்களது கோட்டைகளின் வாசல்களை திறந்து விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அந்த மக்கள் சரணடைந்து விட்ட போது, உடன்படிக்கையை மீறுதல், கிளர்ச்சி செய்தல் மற்றும் விஷமத்தனம் செய்தல் போன்ற அவர்களின் செயல்களின் காரணமாக அந்த மக்களில் போர் புரியக் கூடிய ஆண்களை கொலை செய்வதற்கு அன்னார் (ஸல்) எண்ணம் கொண்டிருந்தார்கள்.ஆனால், நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூலுடைய பரிந்துரையினால் அன்னார் (ஸல்) அந்த எண்ணத்தை கைவிட்டு விட்டார்கள் என்று பனூ கைனுகா தொடர்பான சில அறிவிப்புகளில் இந்த குறிப்பு கிடைக்கின்றது. ஆனால், ஆராய்ச்சியாளர்கள் இந்த அறிவிப்புகளை சரியானவையாக ஒப்புக் கொள்ளவில்லை. ஏனெனில், மற்ற அறிவிப்புகளில் இந்த விஷயம் தெள்ளத் தெளிவாக இடம் பெற்றுள்ளது. அதாவது, தங்களுக்கும் தங்களுடைய குடும்பத்தினருக்கும் உயிர் பிச்சை அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தான் பனூ கைனுகா கோத்திரம் தனது கோட்டையின் வாசல்களை திறந்து விட்டது. அவ்வாறிருக்க, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நிபந்தனையை ஒப்புக் கொண்டு விட்ட பிறகு வேறொரு வழிமுறையை மேற்கொண்டார்கள் அல்லது அந்த நிபந்தனையை மீறிவிட்டார்கள் என்பது எல்லா நிலையிலும் சாத்தியமற்றதாக இருந்தது. மேலும், பனூ கைனுகாவின் தரப்பிலிருந்து உயிர் பிச்சை வழங்க வேண்டும் என்ற நிபந்தனை முன்வைக்கப்பட்டது இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றது. அதாவது, தங்களுக்குரிய அசல் தண்டனை மரணம் ஆகும் என்பதை அவர்கள் சுயமே புரிந்திருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருணை காட்டக் கூடியவராக இருந்தார்கள். மேலும், தாங்கள் கொலை செய்யப்பட மாட்டோம் என்ற இந்த வாக்குறுதி பெற்றுக் கொண்டு விட்ட பிறகு அவர்கள் தமது கோட்டையின் வாசல்களை திறக்க விரும்பியிருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கருணை மிகுந்த இயல்பின் காரணமாக அவர்களை மன்னித்து விட்டிருந்தார்கள். ஆனால், இறைவனின் பார்வையில் இந்த மக்கள் தங்களது தீய செயல்கள் மற்றும் குற்றங்களின் காரணமாக இனி உலகின் திரையில் உயிர் வாழ்வதற்கு அனுமதிக்கப்படுவதற்கு தகுதியானவர்களாக இருக்கவில்லை. ஆக, அறிவிப்பில் வருகின்றது: எந்த இடத்தில் இந்த மக்கள் நாடுகடத்தப்பட்டார்களோ அங்கு அவர்களுக்கு ஒரு வருட காலம் கூட கழிந்திருக்கவில்லை. அதற்குள் அவர்களை நோய் போன்றவை தொற்றிக் கொண்டது. எந்த அளவிற்கு என்றால் முழு கோத்திரத்தினரும் அதற்கு இரையாகி மண்ணில் புதையுண்டு விட்டார்கள்.

பனூ கைனுகாவின் வரலாறு தொடர்பாக ஓரளவிற்கு கருத்து வேறுபாடு உள்ளது. வாக்தீ மற்றும் இப்னு ஸஃது ஆகியோர் ஷவ்வால் மாதம் ஹிஜ்ரீ 2 ஆண்டு என்று எடுத்துரைத்துள்ளனர். மேலும், வரலாற்று ஆசிரியர்கள் அதிலும் பிற்காலத்தில் தோன்றிய வரலாற்று ஆசிரியர்கள் பெரும்பாலும் இதனையே பின் தொடர்ந்துள்ளார்கள். ஆனால், அனைவரும் ஏற்றுக் கொண்ட துல் ஹஜ்ஜா மாதம் ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டின் துவக்கத்தில் நிகழ்ந்த ஸவீக் போருக்கு பிறகான சம்பவங்களில் இதனை இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஹிஷ்ஷாம் ஆகியோர் வைத்துள்ளார்கள். மேலும், பனூ கைனுகா போர் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுடைய மணமகள் அனுப்பி வைத்தல் நிகழ்விற்கு பிறகு நிகழ்ந்தது என்ற சைகையும் ஹதீஸுடைய ஓர் அறிவிப்பில் கிடைக்கின்றது. ஏனெனில், அறிவிப்பில் இந்த விஷயம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமது வலீமா விருந்திற்கான செலவினங்களுக்கு ஏற்பாடு செய்வதற்காக இந்த திட்டத்தை முன் வைத்திருந்தார்கள். அதாவது, பனூ கைனுகாவைச் சேர்ந்த ஓர் யூத நகைத் தொழிலாளியை உடன் அழைத்துக் கொண்டு காட்டிற்கு சென்று அங்கிருந்து அஸ்கர் புல் போன்றவற்றை எடுத்துக் கொண்டு வந்து மதீனாவின் நகை வியாபாரிகளிடம் அவற்றை விற்க வேண்டும் என்ற திட்டத்தை முன் வைத்திருந்தார்கள். பொதுவான வரலாற்று ஆசிரியர்களை பொருத்த வரை ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு துல் ஹஜ்ஜா மாதத்தில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுடைய மணமகள் அனுப்பி வைத்தல் எனும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது வரை பனூ கைனுகா கோத்திரத்தினர் மதீனாவில் தான் இருந்தார்கள் என்று நிரூபணமாகின்றது. இந்தக் காரணங்களின் அடிப்படையில் பனூ கைனுகா போரை ஸவீக் போர் மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மணமகள் அனுப்பி வைத்தல் நிகழ்வு ஆகியவற்றிற்கு பிறகு ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிகழ்ந்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்று ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் இந்த விஷயத்தை குறிப்பிடுவதும் பயனுள்ளதாக இருக்கும். அதாவது, பனூ கைனுகா போருக்கான காரணிளை எடுத்துரைத்தவாறு மிஸ்டர் மார்கோலீஸ் தம் புறமிருந்து ஒரு விநோதமான விஷயத்தை உருவாக்கி எழுதியிருக்கின்றார். ஆனால் எந்தவொரு அறிவிப்பிலும் அதற்கான சைகை கூட கிடைக்கவில்லை. புகாரியில் ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு பத்ர் போர் செல்வங்களில் கிடைத்திருந்த அந்த ஒட்டகத்தைக் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் மது போதையில் (அப்போது வரை மது ஹராமாக்கப்படவில்லை)கொன்று விட்டிருந்தார்கள். இந்த தனிப்பட்ட சம்பவத்தை எந்தவொரு வரலாற்று சான்றும் இல்லாமல் பனூ கைனுகாவுடைய போருடன் இணைத்து நூலாசிரியர் மிஸ்டர் மார்கோலீஸ் இவ்வாறு எழுதுகின்றார்:

அவர்களுடைய போர் செல்வத்திலிருந்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு கட்டும் நோக்கத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ கைனுகா கோத்திரத்தின் மீது படையெடுத்தார்கள். எந்த வகையிலும் பொருத்தமற்ற விஷயத்தை இதனுடன் இணைத்துள்ளார். வரலாற்றை எழுதுவதில் இதுபோன்ற செயலை செய்வதற்கான தைரியத்திற்கு இவருக்கு நிகர் இவராகத் தான் இருப்பார். பின்னர் நான் இந்த விஷயத்தை என் புறமிருந்து கற்பனை செய்து இதில் கூடுதலாக சேர்த்துள்ளேன் என்று மிஸ்டர் மார்கோலீஸ் இந்த விஷயத்தை ஒப்புக் கொள்கின்றார் என்பது ரசனையான விஷயம் ஆகும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 457- 462)

சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை; ஆனால், இரண்டு ஒட்டகங்களுக்கான விலையை ஈடு செய்வதற்காக வேறு எந்த வழிமுறையும் இல்லாததால் ஒரு கோத்திரத்துடன் முழுமையாக போர் புரிந்தார்கள் என்பது எனது எண்ணம் ஆகும் என்று அவர் கூறுகின்றார். இது அவருடைய விநோதமான சிந்தனையாகும். மேற்கத்திய எழுத்தாளர்கள் அல்லது முஸ்லிம் அல்லாத வரலாற்று ஆசிரியர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான பகைமையிலும், காழ்ப்புணர்ச்சியிலும் எந்த அளவிற்கு முன்னேறியிருந்தார்கள் என்றால் வரலாற்றை திரித்து மறித்து எடுத்துரைக்கின்றனர். மேலும் அவர்களுக்கு இந்த பணி மிகவும் எளிதாகும். மேலும், இது பெரும்பாலான இடங்களில் தென்படுகின்றது. எவ்வாறு இருப்பினும், இது தொடர்பான

எஞ்சிய விஷயங்கள் இன்ஷா அல்லாஹ் எதிர் வரும் நாட்களில் கூறப்படும்.

இன்றைய நாட்களின் உலகின் நிலவும் நிலைமைகளுக்காக துஆவிற்காக நான் மீண்டும் நினைவூட்டி விடுகின்றேன். ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கிடையிலான போர் மற்றும் அதன் விளைவாக அப்பாவி பாலஸ்தீனிய பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஷஹாதத்துகள் (எனும் உயிர் தியாகங்கள்) அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. போர்ச் சூழல்கள் எவ்வளவு வேகமாக தீவிரமடைந்து கொண்டிருக்கின்றனவோ மேலும் இஸ்ரேலிய அரசாங்கமும், வல்லரசுகளும் எந்தக் கோட்பாட்டின் படி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ அவற்றை வைத்து பார்க்கும்போது உலகப் போர் தற்போது முன்னால் இருப்பதாகவே தென்படுகின்றது. மேலும், தற்போது சில முஸ்லிம் நாடுகளின் தலைவர்களும் கூட வெளிப்படையாக இதனை கூறத் துவங்கி விட்டனர். தற்போது போரின் இந்த வட்டம் விரிவடைந்து வருவதாக தென்படுகிறது என்று ரஷ்யாவும், சீனாவும் மேலும் இதேபோன்று மேற்கத்திய வல்லுநர்களும் கூட கூறவும், எழுதவும் தொடங்கி விட்டனர். அரசாங்கத்திற்குரிய உடனடியான கோட்பாட்டை மேற்கொள்ளவில்லையென்றால் பின்னர் உலகின் அழிவு ஏற்படும். அனைத்தும் செய்திகளில் வந்து கொண்டிருக்கின்றன. நிலைமை உங்கள் அனைவரின் முன்னிலையிலும் உள்ளது. எனவே அஹ்மதிகள் துஆக்களின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். relax- ஆகிவிடக் கூடாது (அதாவது ஆசுவாசம் அடைந்து விடக் கூடாது).குறைந்தபட்சம் ஒவ்வொரு தொழுகையிலும் ஒரு ஸஜ்தா அல்லது குறைந்தபட்சம் ஏதாவது ஒரு தொழுகையில் ஒரு ஸஜ்தாவை கண்டிப்பாக இதற்காக செய்ய வேண்டும். அதில் துஆ செய்ய வேண்டும்.

மேற்கத்திய நாடுகளில் எந்தவொரு நாட்டின் தலைவரும் இந்த விவகாரத்தில் நீதியுடன் செயல்பட விரும்பவில்லை. இது தொடர்பாக ஏதாவது கூறுவதற்கும் தைரியம் கொள்வதில்லை. எந்த நாட்டின் பிரதமர் அல்லது தலைவர் நல்லவர்? மேலும் எந்த நாட்டின் தலைவர் நல்லவர் இல்லை ?; அவர் இவ்வாறு இருக்கக் கூடாது; முஸ்லிம்கள் அவருக்கு எதிராக பேசக் கூடாது போன்ற விவாதங்களில் அஹ்மதிகள் ஈடுபடாதீர்கள். இவையனைத்தும் வீண் பேச்சுகள் ஆகும். ஒருவர் துணிச்சலுடன் போர் நிறுத்தத்திற்கான முயற்சிகள் செய்யாத வரை அவர் நிச்சயமாக உலகை அழிவின் பக்கம் அழைத்துக் கொண்டு செல்வதற்கு பொறுப்பாளியாக இருக்கின்றார்.

எனவே உங்களது சுற்றுப்புறத்தில் துஆக்களுடன் அநீதியை நிறுத்துங்கள் என்ற விஷயத்தை பரப்புவதற்காக முயற்சி செய்யுங்கள். ஏதாவது ஓர் அஹ்மதிக்கு (உயர் மட்ட அளவில்)ஒருவருடன் தொடர்புகள் இருக்கின்றன என்றால் பின்னர் அவருக்கு புரிய வையுங்கள். இதுவே வீரம் ஆகும். இதுவே அல்லாஹ்வின் கட்டளையின் படி அமல் செய்வதற்கான தரம் ஆகும்.

ஹமாஸ் எங்களது அப்பாவி மக்களை கொன்றுள்ளது. எனவே நாங்கள் பழிவாங்குவோம் என்று இஸ்ரேலிய அரசாங்கத்தின் பிரதிநிதி கூறுகின்றார். ஆனால், இந்த பழிவாங்குதல் தற்போது அனைத்து எல்லைகளையும் கடந்து சென்று விட்டன. இஸ்ரேலியர்களின் உயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக எத்தனை எண்ணிக்கை எடுத்துரைக்கப்படுகின்றதோ அதை விட நான்கு, ஐந்து மடங்கு அதிகமாக பாலஸ்தீனியர்களின் உயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவர்கள் கூறுவது போன்று ஹமாஸை அழிப்பது இவர்களது இலக்காக உள்ளதென்றால் பின்னர் அவர்களுடன் நேருக்கு நேர் போர் புரியுங்கள். பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களை ஏன் குறி வைக்கின்றார்கள்? மேலும் தண்ணீர், உணவு மற்றும் மருத்துவம் போன்ற எல்லாவற்றிலிருந்தும் அந்த மக்களை ஏன் இழப்பிற்குரியவர்களாக ஆக்குகின்றார்கள்? மனித உரிமைகள் மற்றும் போர்களுக்குரிய விதிமுறைகள் தொடர்பான இந்த நாடுகளின் அனைத்து வாதங்களும் இங்கு வந்து முற்றுப் பெற்று விடுகின்றன. ஆம்! சிலர் இதன் பக்கம் கவனமூட்டவும் செய்கின்றனர். உதாரணமாக, கடந்த நாட்களில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா இவ்வாறு கூறியிருக்கின்றார்: போர் புரிய வேண்டும் என்றாலும் , பின்னர் போர் விதிமுறைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். பொது மக்கள் மீது அநீதி இழைக்கப்படக் கூடாது.

ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் அவர்களும் பேசியிருந்தார்கள். அது குறித்து இஸ்ரேலிய அரசாங்கம் கூச்சலிட்டுவிட்டது. ஆக, மாபெரும் அமைதியை நிலைநாட்டக் கூடியவர்களாக தங்களை தாங்களே கருதக் கூடிய ஏனைய உலகின் அமைதிக்கான வாதம் புரியக் கூடியவர்கள் அல்லது தங்களை சாம்பியனாக கருதுகின்றவர்கள் வாதிடக் கூடியவர்கள் ஐநா பொதுச் செயலாளரின் கூற்றுக்கு ஆதரவாக எதுவும் வாய் பேசவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் இதில் விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறு இருப்பினும், நிலைமைகள் அபாயகரமானவையாக உள்ளன. மேலும், மிகவும் அபாயகரமானதாக ஆகிக் கொண்டே செல்கின்றன. மேற்கத்திய நாடுகளின் மீடியா ஒரு தரப்பு செய்திகளை மிகைப்படுத்தி வெளியிடுகின்றது. மேலும் மற்றொரு தரப்பை ஒரு மூலையில் ஒரு குறுஞ் செய்தியாக வெளியிடுகின்றது. உதாரணமாக, கடந்த நாட்களில் பிணையக் கைதியாக இருந்து விடுதலையான பெண்களில் ஒருவர் இவ்வாறு கூறினார்: நான் கைது செய்யப்பட்டிருந்தபோது என்னுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளப்பட்டது. இந்த செய்தியோ ஒரு மூலைக்கு சென்று விட்டது. ஹமாஸ் பிடியில் இருந்தது நரகமாக இருந்தது என்ற கூற்று தலைப்பு செய்திகளாக ஆக்கப்பட்டு முன் வைக்கப்படுகின்றது.

அனைத்து நிலவரங்களையும் முன்னால் வைத்து விட்டு பின்னர் யார் அநீதியாளர்? யார் அநீதியிழைக்கப்பட்டவர்? எந்த அளவிற்கு இந்தப் போர் ஆகுமானதாகும்? இந்தப் போர் எங்கே சென்று முடிய வேண்டும் என்பதையெல்லாம் உலகம் தீர்மானித்துக் கொள்வதற்கு விட்டு விடுவதுதான் நீதி ஆகும்.

உலகிற்கு முன்னால் அனைத்து நிலைமைகளும் வந்து விட வேண்டுமே தவிர ஒரு சார்பு கருத்து கூடாது. எவ்வாறு இருப்பினும் துஆக்களின் பக்கம் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அநீதியை முடிவுக்கு கொண்டு வர உங்களது வட்டத்தில் நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். மேலும் துஆவும் செய்ய வேண்டும்.

அநீதி இழைக்கப்பட்ட முஸ்லிம்களுக்காகவும், முஸ்லிம் அரசாங்கங்கள் ஒரு விரிவான மற்றும் நீண்ட கால திட்டத்தை வகுப்பதற்காகவும் துஆ செய்ய வேண்டும். முஸ்லிம்களின் கஷ்டங்கள் நீங்குவதற்காகவும் நாம் குறிப்பாக வேதனை கொள்ள வேண்டும். நாம் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்றால், (முஸ்லிம்களாகிய) அவர்களின் புறமிருந்து நமக்கு வேதனைகள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றபோதிலும் அன்னார்(அலை) முஸ்லிம்களுக்காக தமது இந்த உணர்வுகளை (ஒரு பாரசீக கவிதையில் இவ்வாறு) வெளிப்படுத்தியுள்ளார்கள்:

ஏ தில் து நீஸ் காதிரே இய்னான் நிகாஃ தார்காகர் குனிந்த் தஃவயே ஹூப்பே பைகம்பரம்.

(இஸாலா அவ்ஹாம், பாகம் 1,ரூஹானீ கஸாயீன் தொகுதி 3,பக்கம் 182)

பொருள்: உள்ளமே! நீ இந்த மக்களை கருத்தில் கொள்!(ஏனினில்) இறுதியில் அவர்கள் எனது தூதர் (ஸல்) அவர்களை நேசிப்பதாக வாதம் செய்கின்றனர்!

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தின் தேட்டம் என்னவென்றால், நாம் முஸ்லிம்களுக்காக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக. மேலும், முஸ்லிம்களுக்கும் உலகத்திற்கும் அறிவை வழங்குவானாக.

தமிழாக்கம்:
மவ்லவி: A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

கூட்டத்தினருக்கு எந்தப் பொருளின் தேவை இருக்க முடியுமா? தேவைகள் போதனைகளை முழுமை செய்வதற்கும், மனிதனின் நல்லொழுக்கம் மற்றும் ஈமானை உறுதிப்படுத்துவதற்காகவுமே ஏற்படுகின்றன.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 499 - காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * *



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

# ஜுமுஆ பேருரை

**ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் போர்க் குழு & ஸவீக் போர்**
**மற்றும் முஸ்லிம்களுடைய முதலாவது ஈதுல் அழ்ஹா தொடர்பான வரலாற்றுச் சம்பவங்கள்**
**ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் போரைக் கருத்தில் கொண்டு துஆவிற்கான அறிவுரை**
**மற்றும் முஸ்லிம் நாடுகளுக்கு அறிவுரை**

**முஸ்லிம் நாடுகளுக்கு நான் முன்பே கூறியிருந்ததுபோன்று, அவர்கள் ஒன்றாக இணைந்து ஒருமித்த குரலில் பேச வேண்டும்**
**அல்லாஹ் இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவானாக. மேலும் அப்பாவிகளான அநீதி இழைக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்கு பாதுகாப்பை வழங்குவானாக.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 அக்டோபர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **அகாஃ** மாதம் **20ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

சென்ற இதழின் தொடர்ச்சி...........

ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அந்த காலத்தில் இந்த வலிமா விருந்தை விட சிறந்த வலிமா வேறு எதுவும் நடைபெறவில்லை. இந்த திருமணமும் வலிமா விருந்தும் எளிமைக்கு உதாரணமாகும். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் திருமணத்தின் விரிவான விவரம் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் கூறப்பட்டுள்ளதை இங்கு கூறிவிடுகின்றேன். சில விஷயங்கள் இன்னும் உள்ளன. எனவே அதை கூறுவது அவசியமாகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மூலமாக பிறந்த பிள்ளைகளில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மிகவும் சிறியவர் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தம்முடைய பிள்ளைகளில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மிகவும் பிரியமானவராக இருந்தார்கள். மேலும் அன்னாரின் இயல்பில் இருந்த சிறப்பு அம்சங்களின் காரணமாக இவர்களே அதற்கு தகுதியானவராக இருந்தார்கள். அவர்களிடம் சிறப்பம்சங்கள் நிறைய இருந்தன. அவர்களின் வயது ஏறக்குறைய 15 ஆக இருந்தது. திருமண வரன் வர ஆரம்பித்தது. முதன் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விண்ணப்பம் வைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) மறுத்து விட்டார்கள். பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விண்ணப்பம் செய்தார்கள். அவர்களுடையதும் ஏற்கப்படவில்லை. அதன் பிறகு இரண்டு சான்றோர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொடர்பாக இருப்பதாக எண்ணி அன்னாரை விண்ணப்பிக்குமாறு கூறினர். ஹஸ்ரத் அலி(ரலி) அவர்கள் முன்பே விருப்பம் கொண்டவராக இருந்திருக்கலாம். ஆனால், வெட்கத்தின் காரணமாக அமைதியாக இருந்தார்கள். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னால் சென்று தமது விண்ணப்பத்தை வைத்தார்கள். மறுபுறம், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமணம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் நடக்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறை வஹீ மூலமாக செய்தி கிடைத்திருந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் விண்ணப்பம் செய்தபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனக்கு இந்த விஷயம் தொடர்பாக முன்பே இறைவனுடைய விருப்பம் கூறப்பட்டு விட்டது. ஆகையால், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் அன்னார் (ஸல்) வினவிய பொழுது அன்னார் (ரலி) அவர்கள் வெட்கத்தின் காரணமாக அமைதியாக இருந்தார்கள்; பதில் (ஏதும்) அளிக்கவில்லை. இருப்பினும், வெட்கப்பட்டார்கள்.

ஆகையால் எழுதுகின்றார்கள்: இதுவும் ஒரு வகையில் விருப்பத்தை வெளிப்படுத்தும் விதமாகும். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் ஸஹாபிகளுடைய ஒரு ஜமாஅத்தை ஒன்று திரட்டி ஹஸ்ரத் (அலி) மற்றும் ஃபாத்திமாவின் நிக்காஹ்வை ஓதினார்கள். இது ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டின் ஆரம்பம் அல்லது இடையில் நடந்த சம்பவம் ஆகும். இதற்குப் பிறகு பத்ர் யுத்தம் நடைபெற்று முடிந்தது. ஏறக்குறைய துல்ஹஜ்ஜா மாதத்தில் மணமகளை வழியனுப்பி வைக்க ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும், உங்களிடம் மஹர் கொடுப்பதற்கு ஏதாவது இருக்கின்றதா? இல்லையா? என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அழைத்து இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் ஏதும் இல்லை என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். அன்று பத்ருடைய போர் செல்வத்திலிருந்து நான் கொடுத்த கவசம் என்ன ஆயிற்று? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். போர் செல்வமாக வழங்கப்பட்டதிலிருந்து நான் உமக்கு வழங்கிய அந்த கவசம் எங்கே? என்றார்கள். மேலும், அதனையே கொண்டு வாருங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள். எனவே அந்த கவசம் 480 திர்ஹமிற்கு விற்பனை செய்யப்பட்டது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தத் தொகையிலிருந்து திருமணத்திற்கான செலவீனங்களை ஏற்பாடு செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு வழங்கியது ஒரு அலங்கரிக்கப்பட்ட போர்வை மற்றும் ஒரு தோலாலான படுக்கை விரிப்பு ஆகும். அதனுள் பேரீச்சம் பழத்தின் காய்ந்த இலைகள் நிரப்பப்பட்டிருந்தன. மேலும், ஒரு தோலாலான தண்ணீர் குவளையையும் சீதனமாக கொடுத்தார்கள்.

மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு ஒரு மாவு அரைக்கும் உரல் கொடுத்தார்கள். இந்த அனைத்து பொருட்களும் தயாரானது. தங்குமிடத்திற்கான கவலை ஏற்பட்டது. ஹஸ்ரத் அலி(ரலி) அவர்கள் அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பள்ளிவாயிலில் ஓர் அறையிலேயே தங்கியிருந்தார்கள். ஆனால், திருமணத்திற்கு பிறகு கணவன், மனைவி தங்குவதற்காக தனியாக ஒரு வீடு தேவைப்பட்டது. ஆகையால், தற்போது நீங்கள் ஏதாவது ஒரு வீட்டை தேடுங்கள். அதில் நீங்கள் இருவரும் தங்கிக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தற்காலிகமாக ஒரு வீட்டிற்கான ஏற்பாட்டை செய்தார்கள். மேலும், அதில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கான மணமகள் வழி அனுப்பி வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. அந்த நாளன்று வழி அனுப்பி வைத்தல் நிகழ்விற்கு பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த வீட்டிற்குச் சென்றார்கள். மேலும் சிறிது தண்ணீர் கொண்டு வருமாறு கூறினார்கள். மேலும், துஆ செய்தார்கள். பின்னர் அந்த தண்ணீரை ஹஸ்ரத் ஃபாத்திமா(ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகிய இருவர் மீதும்

اَللّٰهُمَّ بَارِكْ فِيْهِمَا وَبَارِكْ عَلَيْهِمَا وَبَارِكْ لَهُمَا نَسْلَهُمَا

என்ற இந்த சொற்களை கூறியவாறு தெளித்தார்கள். அந்த துஆவை நான் ஏற்கனவே கூறியிருந்தேன். திருமணம் முடிக்கும் இணையர்களுக்கு அவர்களின் தாய், தந்தை இந்த துஆவை ஓத வேண்டும். இன்றைய காலத்தில திருமணத்திற்கு பிறகு ஆண், பெண் இருவருக்குமிடையில் பிரச்சனைகள் உருவாகின்றன. இந்த எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது. இதற்கு காரணம் உலக எதிர்பார்ப்புகள் ஆகும். அது நிரந்தரமாகி கொண்டே செல்கின்றது. மேலும், மார்க்கம்

மற்றும் இறைவனுடைய கட்டனைகள் மீதான குறைவான கவனம் ஆகும். ஒருவேளை மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள் என்றால் மேலும், இந்த துஆ செய்தார்கள் என்றால் மேலும் பெற்றோர்கள் தங்களுடைய நிலைகளை இவ்வாறு ஆக்கிக் கொண்டார்கள் என்றால் பின்னர் திருமண பந்தங்களும் நிலைத்து நிற்கும்.

எவ்வாறு இருப்பினும் இந்த துஆவின் அர்த்தம் என்னவென்றால், அல்லாஹ்வே! இந்த இருவருக்குமிடையில் உள்ள பந்தத்தில் அருளை பொழிவாயாக! மேலும், இவர்கள் இணையும் பந்தத்திலும் அருளை ஏற்படுத்துவாயாக. மேலும் இவர்களுடைய சந்ததிகளிலும் அருளை ஏற்படுத்துவாயாக. மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த புதிய ஜோடியை தனியாக விட்டு விட்டு திரும்பி வந்து விட்டார்கள். இதன் பிறகு ஒருநாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள்.

அப்பொழுது ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் விண்ணபப்பம் இவ்வாறு வைத்தார்கள்: ஹாரிஸா பின் நுஃமான் (ரலி) அவர்களிடம் உள்ள வீடுகளில் ஏதாவது ஒரு வீட்டை காலி செய்து தருமாறு தாங்கள் கூறுங்கள் என்றார்கள். நாங்கள் அங்கு சென்றால் உங்களுக்கு அருகில் வந்து விடுவோம் என்றும் அன்னார் (ரலி) கூறினார்கள். அதற்கு அவர் நமக்காக இதற்கு முன்பே பல வீடுகளை காலி செய்து கொடுத்து விட்டார்; இப்பொழுது அவர்களிடம் இதை கூறுவதற்கு எனக்கு வெட்கமாக இருக்கிறது என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹாரிஸா அவர்களுக்கு இது தொடர்பாக எப்படியோ தெரிய வந்தது. அவர் ஓடோடிச் சென்றார். மேலும், கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் என்ன இருக்கின்றதோ அது தங்களுடையதாகும். மேலும், இறைவன் மீது ஆணையாக! என்னிடம் இருக்கின்றதை விட தாங்கள் எதை ஏற்றுக் கொண்டீர்களோ அதுவே எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரக் கூடியதாக இருக்கின்றது.

பின்னர் அந்த பற்றுக் கொண்ட ஸஹாபி வலுக்கட்டாயமாக தம்முடைய ஒரு வீட்டை காலி செய்து சமர்ப்பித்து விட்டார். மேலும், ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் அங்கு சென்று தங்கினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோர் தங்களுக்கு ஏழ்மை மற்றும் கஷ்டத்தின் சூழல் இருந்தபொழுதிலும் அதில் திருப்தி அடைந்தவாறு முன்னுதாரணத்தைக் காண்பித்தார்கள். இது தொடர்பாக ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் தாம் உரலில் மாவு அரைப்பதன் காரணத்தால் கையில் வலி ஏற்படுகின்றது என்று முறையீடு செய்தார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சில கைதிகள் கொண்டு வரப்பட்டனர். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். மேலும், அன்னாரை அங்கு காணவில்லை. எனவே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை சந்தித்தார்கள். மேலும், அவர்களிடம் தாம் வந்ததற்கான காரணத்தை கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிற்கு வந்த உடன் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் இங்கே வந்ததற்கான விவரத்தை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) எங்களிடம் வந்தார்கள். அன்னார் (ஸல்) பிறகு எங்களுடைய வீட்டிற்கு வந்தார்கள்.அப்பொழுது நாங்கள் எங்களுடைய படுக்கையில் படுத்திருந்தோம். நாங்கள் எழுந்திருக்க முற்பட்டோம். அப்பொழுது, உங்களுடைய இடத்திலேயே இருங்கள்! என்று ஹஸ்ரத் நபி நாயகம் (ஸல்) கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு நடுவில் அமர்ந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய பாதத்தின் குளுமையை என்னுடைய மனதில் நான் உணர்ந்தேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் கேட்டதை விட மிகச் சிறந்த விஷயத்தை நான் உங்களுக்கு கூறட்டுமா? அது என்னவென்றால் நீங்கள் இருவரும் உங்களுடைய படுக்கையில் படுக்கும்பொழுது 34 முறை அல்லாஹு அக்பர் என்றும் 33 முறை ஸுப்ஹானல்லாஹ் என்றும் 33 முறை அல்ஹம்துலில்லாஹ் என்றும் கூறுங்கள். இது உங்கள் இருவருக்கும் பணியாளை விட மிகச் சிறந்ததாகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது. அதாவது ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்பு பணியாளுக்கான விண்ணப்பத்தை முன்வைத்தார்கள். தம்முடைய பணி தொடர்பான முறையீட்டை வைத்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்: நீங்கள் கேட்டும் அந்த சேவகர் என்னிடம் கிடைக்க மாட்டார். நான் உமக்கு ஒரு விஷயத்தை கூறட்டுமா? அது உமக்கு வேலையாளை விட சிறந்ததாகும். நீங்கள் உங்களுடைய படுக்கைக்குச் செல்லும் பொழுது 33 முறை ஸுப்ஹானல்லாஹ் என்றும், 33 முறை அல்ஹம்துலில்லாஹ் என்றும், 34 முறை அல்லாஹு அக்பர் என்றும் கூறுங்கள். இது முஸ்லிம் ஹதீஸ் நூலில் இடம் பெற்றுள்ள அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வரலாற்றை எடுத்துரைக்கும்போது கூறுகின்றார்கள். இந்த சம்பவத்தை அன்னார் (ரலி) புகாரியின் சான்றின் அடிப்படையில் எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்: உரல் ஆட்டும்பொழுது தமக்கு வேதனை ஏற்படுகின்றது என்று ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் முறையீடு செய்தார்கள். அந்த தருணத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சில அடிமைகள் கொண்டு வரப்பட்டிருந்தனர். ஆகையால், அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வீட்டில் இருக்கவில்லை. அதனால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் தம்முடைய வருகைக்கான நோக்கத்தை கூறிவிட்டு வீட்டிற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஹஸ்ரத் ஃபாத்திமாவின் வருகை குறித்து கூறினார்கள். அதனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் வருகை தந்தார்கள். மேலும் நாங்கள் எங்களுடைய படுக்கையில் படுத்திருந்தோம். நான் அன்னார் (ஸல்) வருகை தருவதைப் பார்த்து எழ நினைத்தேன். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னை என்னுடைய இடத்திலேயே படுத்திருக்குமாறு கூறினார்கள். பிறகு எங்கள் இருவருக்கும் நடுவிலேயே அமர்ந்து விட்டார்கள். எந்த அளவிற்கு என்றால் அன்னாருடைய பாதங்களின் குளுமையை என்னுடைய மனதில் நான் உணர்ந்தேன். நான் உங்களுக்கு எவ்வாறான விஷயத்தை கூறபோகின்றேன் என்றால் அந்த விஷயம் நீங்கள் வினவியதை விட மிகச் சிறந்ததாகும். மேலும், அது என்னவென்றால் நீங்கள் உங்களுடைய படுக்கையில் படுக்கும்போது 34 முறை அல்லாஹு அக்பர் என்றும் 33 முறை ஸுப்ஹானல்லாஹ் என்றும் 33 முறை அல்ஹம்துலில்லாஹ் என்றும் கூறுங்கள். இது உங்களுக்கு பணியாளை விடச் சிறந்ததாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சம்பவத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செல்வங்களை பிரித்துக் கொடுக்கும்போது மிகவும் கவனமாகவும் இருந்தார்கள். அதற்கு ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு ஒரு வேலையாளின் தேவை இருந்தது. மேலும், உரல் ஆட்டும் பொழுது அன்னாருடைய கைகளில் வேதனை ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இருப்பினும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர்களுக்கு சேவை செய்வதற்காக பணியாள் யாரையும் வழங்கவில்லை. மாறாக, துஆ செய்யுமாறு கூறினார்கள்.மேலும், அல்லாஹ்வின் பக்கம் திருப்பி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பியிருந்தார்கள் என்றால், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு அடிமையை வழங்கி இருக்கலாம். ஏனெனில், போர்செல்வத்தை பிரிக்கும் போது அன்னார் (ஸல்) ஸஹாபிகளுக்கு பிரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மேலும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கும் அதில் உரிமை இருந்திருந்தது. மேலும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கும் அதில் உரிமை இருந்திருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டார்கள். மேலும், அந்த போர் செல்வத்தை தம்முடைய நெருக்கமானவர்கள் மற்றும் உறவினர்களுக்கு வழங்குவதிலிருந்து தம்மை காத்துக் கொண்டார்கள்.

ஏனெனில், எதிர் காலத்தில் வருகின்ற மக்கள் இதிலிருந்து ஏதாவது ஒரு விளக்கம் எடுத்து விடலாம்.மேலும் மன்னர்கள் தங்களுக்காக மக்களின் செல்வத்தை ஆகுமானதாக ஆக்கிக் கொள்ளலாம். ஆனால் நற்பேறு அற்ற இன்றைய காலத்து மன்னர்கள் இருக்கின்றனர்; முஸ்லிம் மன்னர்கள் தங்களுக்கு அதை ஆகுமானதாக கருதுகின்றனர்.

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த தருணத்தில் பிரித்துக் கொடுப்பதற்காக தம்மிடம் வந்த ஆண் மற்றும் பெண் அடிமைகளை ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு வழங்கவில்லை. அதிலிருந்து தம்மை காத்துக் கொண்டார்கள். இந்த இடத்தில் இந்த விஷயத்தையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது அந்த செல்வத்தில் அன்னாருக்கும் அன்னாருடைய உறவினர்களுக்கும் இறைவன் புறம் இருந்து பங்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. அதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செலவு செய்திருக்கலாம். மேலும் தம்முடைய நெருங்கிய உறவினர்களுக்கு கொடுத்திருக்கலாம். நிச்சயமாக எந்த பொருள் அன்னாருடைய பங்கில் வரவில்லையோ அதை உறுதியாக எடுக்கவில்லை. மேலும், தம்முடைய நெருங்கிய உறவினர்களுக்கும் வழங்கவில்லை. உலகின் ஏதாவது ஒரு

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 30 NOVEMBER 2023 Issue No. 48

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மன்னன் பைத்துல் மாலின் இவ்வாறான பாதுகாவலராக திகழ்ந்தார் என்பதற்கான உதாரணத்தை காட்ட முடியுமா? ஏதாவது உதாரணத்தை காட்ட முற்பட்டாலும் அது இந்த தூய இருப்பின் தொண்டர்களை தவிர வேறு எந்த மதத்திலும் இதற்கான நிகரான ஓர் உதாரணத்தை காட்ட முடியாது. எஞ்சியவை இன்ஷா அல்லாஹ் எதிர் வரும் காலத்தில்!

தற்பொழுது நான் மீண்டும் உலகின் சூழலின் காரணமாக துஆவிற்காக கூற விரும்புகின்றேன். பழிதீர்ப்பதற்கும் ஓர் எல்லை இருக்கின்றது என்று மேற்கத்திய நாடுகளின் இன்னும் கூறப்போனால் அமெரிக்காவின் சில பத்திரிகைகளில் எழுதுபவர்கள் கூட தற்போது எழுதுகின்றார்கள். மேலும் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுடைய போரில் தங்களது பங்களிப்பை காட்ட நினைக்கின்றன. மேலும், சமாதானம் மற்றும் போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால், தெரிய வருவது என்னவென்றால், எழுதுபவர்கள் எழுதுகின்றனர்: இந்த மக்கள் போரை நிறுத்துவதற்கு பகரமாக அதை மூட்டுவதில் தீவிரமாக இருக்கின்றனர்.அமெரிக்காவில் நேற்றும் செய்தி வந்தது.இது எல்லையை கடந்து விட்டது என்று கூறியவாறுவெளியுறவுத் துறையின் ஒரு மிகப் பெரிய அதிகாரி ராஜினாமா செய்துள்ளார். பாலஸ்தீனிய அப்பாவிகள் மீது மிகப் பெரிய அநீதி நடக்கின்றது. மேலும், வல்லரசுகள் அவர்களை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆகையால் இந்த மக்களில் நல்லவர்களும் இருக்கின்றார்கள். இதேபோன்று சில மீடியாக்களில் வருகின்றது. சில நன்மையை விரும்பும் யூதர்களும் இவர்களுடைய உரிமை தொடர்பாக பேசுகின்றார்கள். மேலும், அநீதிக்கு எதிராக பேசுகின்றார்கள்.ரஷ்யாவின் வெளியுறவுத் துறை அதிகாரி இவ்வாறு கூறியிருக்கின்றார்: இவ்வாறு இந்த நாடுகள் தங்களுடைய நிலையை மாற்றிக் கொள்ளவில்லை என்றால் இந்தப் போர் அந்த முழு பகுதியிலும் பரவி விடும். ஆனால், நான் புரிந்தது என்னவென்றால் அது உலகத்தில் பரவி விடும். ஆகையால் நிதானத்துடன் இருப்பது அவசியம் ஆகும். முஸ்லிம் நாடுகளுக்கு நான் முன்பே கூறியிருந்ததுபோன்று, ஒன்றாக இணைந்து ஒரு குரலில் பேச வேண்டும். உலகில் 53,54 முஸ்லிம்கள் நாடுகள் இருக்கின்றன எனக் கூறுகின்றார்கள் என்றால் பின்னர் ஒருமித்தக் குரலில் பேசுங்கள். அது மிகப் பெரிய சக்தியாகும். மேலும், அதற்கு தாக்கமும் இருக்கும். அவ்வாறில்லை என்றால் பின்னர் ஆங்காங்கே குரல்கள் எழுப்புவதனால் எந்தப் பயனும் இல்லை. உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இந்த ஒரு வழி தான் உள்ளது. மேலும், இந்த போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.ஆகையால் முஸ்லிம் நாடுகள் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக தங்களுடைய பங்களிப்பை முழுவதுமாக செலுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் இவர்களுக்கு இதற்கான நற்பேறை வழங்குவானாக. ஆனால், எவ்வாறு இருப்பினும் நாம் துஆவின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டியது அவசியமாகும். அல்லாஹ் இந்த போரை முடிவுக்கு கொண்டு வருவானாக. மேலும், அப்பாவிகளான அநீதி இழைக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்கு பாதுகாப்பை வழங்குவானாக. இதற்கு மேலும் அவர்கள் மீது அநீதி ஏற்படாமல் இருக்கட்டுமாக. மேலும், எங்கெல்லாம் அநீதி நடக்கின்றதோ அங்கெல்லாம் அநீதி உலகில் இருந்து முடிவுக்கு வரட்டுமாக. அல்லாஹ் நமக்கு துஆ செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. ஆமீன்.

தமிழாக்கம்:
மவ்லவி M. ஷஹாபுதீன்

* * * * *

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

வந்தனர். ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் இதன் காரணமாக யூதர்கள் நேர்வழியில் இருந்து

இழப்பிற்குரியவர்களாக இருந்தனர். மேலும், அந்நிய சமுதாயங்கள் பிடிவாதம் செய்து அந்த மார்க்கத்தில் இணையத் துவங்கினர்.

வசனம் எண் 70-ன் விளக்கவுரையில் ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நீர் என்னை பொறுமைசாலியாக காண்பீர்; மேலும் நான் உமது கட்டளைக்கு மாறு செய்ய மாட்டேன் என்று மூஸா (அலை) கூறினார். இது கனவுக் காட்சியாக இருந்தது என்று இந்த வசனத்திலிருந்து வெளிப்படுகின்றது. ஏனெனில், வேதம் வழங்கப்பட்ட நபியாக இருந்த ஹஸ்ரத் மூஸா (அலை), இரண்டாவது நபர் யாராக இருந்தாலும் அவரிடம் நான் ஆன்மீக விவகாரங்களில் உமக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்று கூறியிருக்க முடியாது.

இந்த வசனத்தில் இந்த சைகையும் உள்ளது. அதாவது, மூஸவிய சமுதாயத்தில் இருந்து எந்த மக்கள் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தை காண்பார்களோ அவர்களுக்கு முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கீழ்படிவது கடமையாகும். மேலும், ஹதீஸில் இதன் பக்கமே இந்த சொற்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது:

لَوْ كَانَ وَ عِيْسٰى حَيَّيْنِ لَمَا وَسِعَهُمَا اِلَّا اتِّبَاعِي

(இப்னு கஸீர், தொகுதி 2, பக்கம் 246)

மூஸாவும், ஈஸாவும் உயிருடன் இருந்திருந்தால் பின்னர் அவர்களும் கூட என்னை பின்பற்றி இருப்பார்கள்.(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 476 -காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * *

## 128-வது காதியான் ஜல்ஸா-2023

ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் அவர்கள் வருகிற டிசம்பர் 29,30,31 ஆகிய தேதிகளில் 128-வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தயாரிப்புகளை துவங்கிவிடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை வழங்குவானாக. மேலும், இந்த ஜல்ஸா எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்காகவும், நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்காகவும் துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்-வ- இர்ஷாத் மர்கஸிய்யா-காதியான்)

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad